# உதயன்

பக்கங்கள் - 20 | விலை - 30 ரூபா  செய்தி: 021 493 0000  விளம்பரம்: 021 493 1111

சுடர் :35  கதிர் :215  ஆனி 17 ஆம் நாள் புதன்கிழமை 01 ஜூலை 2020  வள்ளுவர் ஆண்டு 2051


## கொரோனா நேற்று 5

கொழும்பு, ஜூலை 1

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான 5 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்தது.

அந்த ஐந்து பேரும் ஓமான் நாட்டிலிருந்து நாடு திரும்பியவர்களாவர்.

அதன்படி கொரோனாத் தொற்று எண்ணிக்கை நாட்டில் 2 ஆயிரத்து 47 ஆக அதிகரித்துள்ளது. கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்

19

## வாக்குகள் எண்ணல் 6ஆம் திகதி காலையே!

தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு



கொழும்பு, ஜூலை 1

பொதுத்தேர்தலில் வாக்கெண்ணும் நடவடிக்கைகள் ஓகஸ்ட் 6 ஆம் திகதி காலை 8 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

19

## வெடிப்புச் சம்பவங்களே வேட்டைக்கு காரணம்!

கைதுகளுக்கு நியாயம் கற்பிக்கிறார் பொலிஸ் பேச்சாளர்

யாழ்ப்பாணம், ஜூலை 1

வடக்கில் சில இடங்களில் வெடி பொருள்கள் அண்மையில் வெடித்துள்ளன. இன்னும் சில இடங்களிலிருந்து வெடி பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. இவை தொடர்பிலான

19

## ஜூலை 13 விசேட தபால் வாக்களிப்பு

கொழும்பு, ஜூலை 1

பொதுத் தேர்தலில் தபால் மூலவாக்களிப்புக்கான விசேடதினமாக ஜூலை 13 ஆம் திகதியை தேர்தல்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது. பொதுச் சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல சுகாதார அதிகாரிகள் மற்றும் சுகாதார அமைச்சின் ஊழி

18

# மீண்டும் புலிக்காய்ச்சல் வடக்கில் 21 பேர் கைது!

## சத்தம் சந்தடியின்றி அரங்கேற்றியது ரி.ஐ.டி.

யாழ்ப்பாணம், ஜூலை 1

தமிழீழ விடுதலைப் புலிகளை மீளுருவாக்க முற்படுகின்றனர் என்று குற்றச்சாட்டி பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் வடக்கு மாகாணத்தில் 21 பேரை கைதுசெய்து விசாரணைக்குள் வைத்திருக்கின்றனர். சத்தம் சந்தடியில்லாமல் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் இந்தக் கைது வேட்டையில் ஈடுபட்டனர். அத்தோடு இன்னும் பலர் கைதுசெய்யப்படலாம் என்ற அச்சம் மக்களிடம் மேலெழுந்துள்ளதால், அவர்கள் பயப்பீதியில் உள்ளனர் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

19

சட்டத்தரணி குருபரனின் மனு மீதான

## விசாரணையிலிருந்து விலகினார் நீதியரசர்

யாழ்ப்பாணம், ஜூலை 1

"சட்டத்துறை சார்ந்த கல்வியாளர் நீதிமன்றங்களில் முன்னிலையாகி சட்டத்தரணி தொழிலை செய்வதற்கு அனுமதிக்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு. அதுவே சட்டத்துறை சார்ந்த கல்வியாளர்களுக்கு பொருத்தமாகவும் அமையும். அதனையே பல சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தியிருந்தேன். எனவே இந்த மனுமீதான விசாரணையை நடத்தும் அமர்விலிருந்து

19

## மாகாணசபை இல்லாத அரசமைப்பே வேண்டும்!

கோத்தாவிடம் கோருகிறார் குணதாச



யாழ்ப்பாணம், ஜூலை 1

மாகாணசபை முறைமையை முற்றாக நீக்கி அதிகாரப் பகிர்வு கோட்பாட்டை இல்லாது செய்யும் வகையிலேயே புதிய அரச

19

## பாடசாலை அதிபருக்கு விக்கியால் சிக்கல்!

யாழ்ப்பாணம், ஜூலை 1

மல்லாகம் குளமங்கால் பகுதியில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பரப்புரைக் கூட்டத்துக்கு 'பாண்ட்' வாசிக்க அனுமதி வழங்கிய பாடசாலை அதிபரிடம் வடக்கு மாகாண கல்வி அமைச்சு விளக்கம் கோரியுள்ளது. தமிழ் மக்கள் தேசியக் கூட்ட

18

## 'தங்கையை ஏன் படமெடுத்தாய்?' அலைபேசிகளை அபகரித்த குழு அகப்பட்டது!

19

## மோசடிகளை தவிர்க்க ஈ -காணி பதிவுமுறை

செயற்படுத்த ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, ஜூலை 1

காணி பதிவின்போது இடம்பெறும் மோசடிகளை தவிர்ப்பதற்கும் பதிவு பொறி முறைமையை துரிதப்படுத்துவதற்கும் ஈ -

19


அவசர பணத்தேவைகளுக்கு செலான் வங்கியில் தங்கத் தீர்வு

அதிகபட்ச முற்பணத் தொகை

ரூ 57,000/-

இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே

செலான் தங்கக் கடன்

011 200 88 88

செலான் வங்கி



UNLIMITED

Facebook Instagram Twitter LinkedIn

ரூபா. 99 + வரி

#170#

4G

Sri Lanka Telecom Mobitel

# நீதி கோரி கவனவீர்ப்பு




வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் ஒன்றிணைந்து வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்றுக் காலை கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். 'சர்வதேசமே வீதியில் கண்ணீருடன் நாம், எமக்கான நீதியை நாம் பெற ஏதுவாக இலங்கையை சர்வதேச நீதிமன்றுக்கு பாரப்படுத்து' என்ற கோரிக்கையை முன்வைத்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வட கிழக்கில் தமிழருக்கு எதிராக செயற்படும் சுமந்திரனை எதிர்க்கின்றோம், வடகிழக்கில் தமிழருக்கு எதிராக நடத்தப்படும் இராணுவ கெடுபிடிகளை உடன் நிறுத்து, இலங்கையில் போர்க் குற்றம் செய்தவர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முற்படுத்துங்கள், வெள்ளை வானில் கடத்தி செல்லப்பட்டவர்கள் எங்கே, சிறைகளில் வாடும் அரசியல் கைதிகளை எந்தவித நிபந்தனையும் இன்றி விடுதலை செய் என்று எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியிருந்ததுடன் கோசங்களையும் எழுப்பியிருந்தனர். (ஒ.5,110)

# கொடுப்பனவில் பாரபட்சம்

## வேட்பாளர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 1

சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவில் வடக்கில் மாவட்டங்களுக்கு இடையில் பெரும் வித்தியாசம் உள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளர் உமா சந்திரா பிரகாஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

போரின் பின்னர் குறிப்பிடத்தக்களவானவர்கள் சிறுநீரக, இருதய மற்றும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். கிளிநொச்சியில் சிறுநீரக நோயாளியொருவரை நேற்றுச் சந்தித்தேன். கிளிநொச்சியில் சிறுநீரக நோயாளிகளுக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா உதவித் தொகை கிடைப்பதாக தெரிவித்தார். முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் 5 ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது. அதை நாம் உறுதி செய்தோம். யாழ்ப்பாணத்தில் ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது.

கொழும்பு அரசிடமிருந்து 5 ஆயிரம் ரூபாவும், மாகாண அமைச்சிடமிருந்து ஆயிரம் ரூபாவையும் பெறுவதற்கு நோயாளிகள் உரித்துடையவர்கள். இந்த நடைமுறை மக்களை சென்று சேர்ந்துள்ளதா? முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களின் நோயாளர்கள் கொழும்பு, மாகாண அரசுகளின் கொடுப்பனவை பெற தகுதியுடையவர்கள் என்று சொல்கிறார்கள். அப்படியானால், கிளிநொச்சி, யாழ்ப்பாண நோயாளர்கள் ஏன் புறக்கணிக்கப்படுகிறார்கள்?

இது தொடர்பாக இரண்டு மாவட்டச் செயலர்களுடன் தொடர்பு கொள்ள முயன்றேன். முடியவில்லை.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 6 ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது. ஆரம்பக் கல்வி சிறப்பாக இருந்தால் தான், மாணவர்களை உயரத்துக்கு கொண்டு செல்லலாம். அந்த ஆசிரியர்கள் சந்தோசமாக இருந்தால் தான் மாணவர்களின் கல்வி சிறக்கும். ஆனால் அதற்கான வாய்ப்பு இருக்கிறதா? முன்பள்ளி ஆசிரியர்கள் 6 ஆயிரம் ரூபாதான் சம்பளம் பெறுகிறார்கள். அவர்களிற்கு சமுர்த்தி கொடுப்பனவு உள்ளிட்ட எந்த கொடுப்பனவும் வழங்கப்படுவதில்லை.

அதேநேரம், தேர்தல் சமயத்தில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சம்பள அதிகரிப்பு தொடர்பாக பொய்யான வாக்குறுதியளிக்கிறார்கள். இவர்களுக்கு சம்பளம் அதிகரிப்பதாக வாக்குறுதியளிப்பவர்கள், அதை எப்படி வழங்கப்பட வேண்டுமென பகிரங்கப்படுத்த வேண்டும். வெறுமனே ஆசிரியர்களை ஏமாற்றும் விதமாக வாக்குறுதியளிப்பதை கண்டிக்கிறோம்.

ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்தில் கோத்தாபய கூறியிருந்தார், 8ஆம் வகுப்பிற்கு மேல் கல்வி கற்றவர்களிற்கு ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு வழங்குவதாக தெரிவித்தார். தேர்தல் முடிந்து, நாடாளுமன்ற தேர்தல் வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வெறுமனே சுயவிவர கோவைகள் பெறப்பட்டுள்ளது. தேர்தல் நெருங்கும் இந்த சந்தர்ப்பத்தில் மக்களுக்கு பொய்யான வாக்குறுதிகள் வழங்குவதாக அறிகிறோம். இராணுவத்தினர் இந்த செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர். வீடுகளுக்கு செல்லும் இராணுவம் உதவித்தொகை பெற்றீர்களா, வேலைவாய்ப்புக்கு விண்ணப்பித்தீர்களா என்று மக்களை ஏமாற்றி வருகிறார்கள். இது தேர்தல் விதிமீறல், என்றார். (ஒ.5,20)

# இராவணனுக்கும் பௌத்தர்கள் இப்போது உரிமை கோருகிறார்கள்

## சுரேஸ் பிரேமச்சந்திரன் குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், ஜூலை 1**

**தமிழ் மக்களின் வரலாறு 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. யாரும் இந்தியாவிலிருந்து வந்து குறியேறியவர்கள் அல்லர். ஆனால், மகாவம்சத்தில் விஜயன் இந்தியாவிலிருந்து 700 தோழர்களுடன் வந்ததாக குறிப்பிடுகின்றது. அதுமட்டும் அல்லாமல் விஜயன் வருகின்ற பொழுது இலங்கையில் ஐந்து ஈஸ்வரங்கள் இருந்தன என்று சிங்கள வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றார்கள். இலங்கையை ஆண்டவன் இராவணன். ஒரு சிவ பக்தன். இராமாயண காலம் 10 ஆயிரம் வருடங்கள் முற்பட்டது என ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். இன்றைய சூழலில் இராவணனுக்கும் கூட உரிமை கோர ஆரம்பித்துள்ளார்கள் பௌத்தர்கள்.**

இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் வேட்பாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். மல்லாகம் குளமங்காலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்திய இலங்கை ஒப்பந்தத்தினூடாக வடக்கு கிழக்கு மாகாணம் இணைக் கப்பட்டது. இணைக்கப்பட்டதற்கு காரணமாக இருப்பது வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் வரலாற்று பூர்வீகமான வாழ்விடம். அவர்கள் ஒன்றாக வாழவிரும்புகிறார்கள் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டு அது ஒரு மாகாணமாக இணைக்கப்பட்டது. திருகோணமலை தலைநகராக மாற்றப்பட்டது. 18 ஆண்டுகளின் பின் வடக்கு, கிழக்கு இணைப்பு பிரிக்கப்பட்டது. போருக்குப் பின்னர் உள்ள காலத்தில் சிங்கள குடியேற்றங்கள் வடமாகாணத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வவுனியா, முல்லைத் தீவு, நாவற்குழி ஆகிய இடங்களில் ஏறக்குறைய 2 லட்சத்துக்கும் மேற்பட்டோர் குடியேற்றப்பட்டிருக்கின் றார்கள். அது மாத்திரமல்லாமல் ஜனாதிபதி கிழக்கு மாகாணத்தில் புதிய செயலணியை மேதானந்த தேரர் உட்பட்ட தேரர்களையும் இராணுவத்தையும் உள்ளடக்கி உருவாக்கியுள்ளார். காரணம், கிழக்கில் பௌத்த சின்னங்கள் எங்கெல்லாம் உள்ளனவோ அந்த இடங்களை அடையாளங் கண்டு அந்த இடங்களை தம்வசப்படுத்தி கிழக்கை மேலும் சிங்கள பௌத்தமயமாக்குவதே. தமிழ் மக்களின் வரலாறு 3 ஆயிரம் வருடங்களுக்கு முற்பட்டது. இந்தியாவில் இருந்து வந்து குடியேறியவர்கள் இல்லை. ஆனால், மகாவம்சம் விஜயன் இந்தியாவில் இருந்து 700 தோழர்களுடன் வந்ததாக குறிப்பிடுகின்றது. அது மட்டும் அல்லாமல் விஜயன் வருகின்ற பொழுது இலங்கையில் ஐந்து ஈஸ்வரங்கள் இருந்தாக சிங்கள வரலாற்று ஆசிரியர்கள் கூறிப்பிடுகின்றார்கள். அது மாத்திரமல்லாமல் இலங்கையை ஆண்டவன் இராவணன். ஒரு சிவ பக்தன். இன்றைய சூழலில் இராவணனுக்கும் கூட உரிமை கோர ஆரம்பித்துள்ளார்கள் பௌத்தர்கள். திருகோணமலையில் உள்ள கன்னியா வெந்நீருற்று கிணறு இராணவனால் தனது தாயின் இறுதிக் கிரியைகளை மேற்கொள்வதற்காக உருவாக்கப்பட்டதாக ஐதீகங்கள் கூறுகின்றன. ஆனால் இன்று முழுமையாக சிங்கள பௌத்தர்களால் கபளீகரம் செய்யப்பட்டு விட்டன. அங்கிருந்த சிவன் ஆலயம், பிள்ளையார் ஆலயம் முற்றுமுழுதாக அழிக்கப்பட்டு விட்டன. தற்போதைய சூழலில் புதிய சிந்தனை, புதிய அணுகுமுறையின் அவசியம் ஏற்பட்டுள்ளது. இதன் அடிப்படையில்தான் நாம் விக்னேஸ்வரன் தலைமையில் புதிய கூட்டணியாக இணைந்து தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியை உருவாக்கியுள்ளோம். என்றார். (ஒ.5)

# சட்டத்தரணி மீது பொலிஸார் வழக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் சட்டத்தரணி ஒருவர் மதுபோதையிலும் சாரதி அனுமதிப்பத்திரமின்றியும் வாகனம் செலுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் தெல்லிப்பளை பொலிஸார் இன்று வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது. தெல்லிப்பளை பொலிஸ் பிரிவில் வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார், கார் செலுத்திவந்தவரை நிற்குமாறு வழிமறித்தபோது, நிறுத்தாது சென்றுள்ளார். அவரைத் துரத்திச் சென்ற பொலிஸார் வழிமறித்தனர்.

காரை செலுத்திச் சென்றவர், தன்னை சட்டத்தரணி என்று பொலிஸாருக்கு அறிமுகம் செய்தார். எனினும், அவர் மதுபோதையில் இருப்பதை முகத்தோற்றளவில் அறிந்துகொண்ட பொலிஸார், சாரதி அனுமதிப்பத்திரத்தைக் கோரியுள்ளனர்.

இலகுரக வாகனங்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரமும் அந்த இளம் சட்டத்தரணியிடம் இல்லை என்றும் அதனால் அவர் மீது வழக்குப் பதிவு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (கு-26)

# ஹெரோய்ன் மீட்பு இளைஞன் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 1

4 கிராம் ஹெரோய்ன் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்தார் என்று குற்றஞ்சாட்டி என்று குற்றச்சாட்டி இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணப் போலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பெரியகோவில் வீதிப் பகுதியில் ஹெரோய்ன் போதைப்பொருள் கடத்தப்படுவதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸார் நடத்திய சோதனை மற்றும் விசாரணையில் கைது இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். மணியந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த இளைஞரே கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 4 கிராம் 680 மில்லிகிராம் நிறையுடைய ஹெரோய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (கு-20)

# பொறுப்புக்கூறலிலிருந்து அரசு விலகவே முடியாது

## மாவை.சேனாதிராசாவும் வலியுறுத்து

**யாழ்ப்பாணம், ஜூலை 1**

**காணாமல் ஆக்கப்பட்டவர்கள் இல்லை என்றால் உயிரிழந்திருக்கக் கூடும் என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்ததானது பொறுப்பற்ற செயற்பாடாகும். போர்க் காலத்திலும், போரின் இறுதியிலும் இராணுவத்தினரிடம் சரணடைந்தோர் கைது செய்யப்பட்டோர் விடயத்தில் இராணுவத் தளபதியின் இறந்துவிட்டார்கள் என்ற பதிலுக்குப் பதிலாக இலங்கை அரசு பொறுப்புக்கூறும் கடப்பாட்டை ஏற்று பொறுப்புள்ள பதிலைக் கூறுமாறு வற்புறுத்துகிறோம்.**



இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2009ஆம் ஆண்டு ஏப்ரல் 10ஆம் திகதிக் காலத்தில் அரசுத் தரப்புக்கும் விடுதலைப் புலிகள் தரப்பின் சார்பிலும், விடுதலைப் புலிகளில் சரணடைய விரும்பிய வர்களைக் கௌரவமாகவும் பாதுகாப்பாகவும் நடத்துவது பற்றிப் பேச்சுக்கள் இடம்பெற்றன.

விடுதலைப் புலிகள் தரப்பில் சரணடைய விரும்புபவர்கள் வெள்ளைக் கொடிகளுடன் வந்தால் அவர்கள் பாதுகாப்புடன் நடத்தப்படுவர் என்று பேச்சுக்களின்போது அரசு தரப்பு உத்தரவாதமளித்தது. தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகள் பலர் வெள்ளைக் கொடிகளுடன் சரணடைந்தனர். போராளிகளின் உறவினர்களால் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டவர்களும் பலர் இருந்தனர். இதற்கான சாட்சியங்களும் இருந்தன. அவ்வாறு சரணடைந்தவர்கள்தற்போது இல்லை. அவர்களைப் பற்றிய தேடுதல்களும் கேள்விகளுமே தற்பொழுது முக்கியமான கேள்வியாகும். இந்த முக்கிய விடயம் பற்றி யாரும் பேசுவதில்லை. இராணுவத் தளபதியும் பொறுப்புடன் பதிலளிக்கவில்லை.

அரசுக்கும் விடுதலைப் புலிகள் தரப்பு அனுசரணையாளர்களுக்குமிடையில் ஏற்பட்ட இணக்கத்துடன் வெள்ளைக் கொடிகளுடன் சரணடைந்தவர்கள். அவ்வாறில்லாமல் சரணடைந்தவர்கள் என்று இரண்டு வகையினர் உள்ளனர்.

2019ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பச்லெட் சமர்ப்பித்த அறிக்கையில், இலங்கையில் சித்திரவதை, காணாமல் ஆக்கப்படல், போர்க்குற்றங்கள், மனிதத்துவத்துக்கு எதிரான குற்ற மீறல்களுக்குப் பொறுப்பானவர்களென குற்றஞ்சாட்டப்பட்டோர் மீது விசாரணைகள் மேற்கொள்ளல், பதிலளிக்கும் கடப்பாடு, மனித உரிமை மீறல்களுக்குத் தீர்வு காணுதல் முதலான விடயங்களை வற்புறுத்தி அறிவித்திருந்தார். இவை மனித உரிமைப் பேரவைத் தீர்மானங்களில் உள்ளவையாகும். இராணுவத்தளபதி சவேந்திர சில்வா இவற்றுக்குப் பதில் சொல்லக் கடப்பாடு உடையவர். ஜெனிவா சாசனத்தின் படி போர்க்குற்றங்கள், மனிதத்துவத்திற்கு எதிரான குற்றம், இனஅழிப்பு, பலவந்தமாகக் காணாமல் போதல் முதலான சர்வதேச மனிதாபிமான சட்டத்தை மீறல் தொடர்பில் விசாரணை செய்தல் என்பவற்றையும் வற்புறுத்தப்பட்டுள்ளது. இலங்கை அரசு இதனை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள், சரணடைந்தவர்கள் இறந்திருக்கலாம் என்பது அரசு பதில் சொல்ல வேண்டிய கடப்பாட்டை குற்றம் சுமத்தப்பட்ட இராணுவத் தளபதி சொல்வதை ஏற்கமுடியாது. எங்கே, எப்படி, என்ன விதத்தில் எத்தனை பேர் யாரால் எந்தக் காலப் பகுதியில் இறந்தார்கள் என்பதற்கு அரசு பொறுப்புக் கூற வேண்டும் என்று வற்புறுத்துகிறோம். ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் வற்புறுத்தியவாறு, பாதுகாப்புக் காரணங்களுக்காக இராணுவம் பயன்படுத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட விசேட விடயங்களைத் தீர்மானிக்க சுயாதீனமான பொறிமுறையொன்றை ஏற்படுத்த வேண்டியது அவசியம். இவ்விடயங்களில் பதிலளிக்க வேண்டியது அரசும், சுயாதீன பொறிமுறை மன்றுமே தான். இராணுவத் தளபதியல்ல.

ஐ.நா. தீர்மானங்களிலிருந்து வெளியேறிவிட்டாலும் சர்வதேசத்தால், ஐ.நாவால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களிலி ருந்து இலங்கை விலக முடியாது. அந்தத் தீர்மானங்களை நிறைவேற்ற ஐ.நா. மனித உரிமைப் பேரவை தொடர்ந்தும் முயற்சிகளையும் அழுத்தங்களையும் பிரயோகித்து வருகிறது, என்றுள்ளது. (ஒ,5)

# தேர்தல் சுவரொட்டி ஒட்டிய 2பேர் கைது

மன்னார், ஜூலை 1

மன்னார் மாவட்டத்தில் தேர்தல் சுவரொட்டி ஒட்டிய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர். ஒரு வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளது. நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகனின் தேர்தல் சுவரொட்டிகளுடனேயே இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட இருவரையும், சான்றுப் பொருள்களுடன் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளோம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ,5)

# வேட்பாளர் பட்டியலிலிருந்தே கருணாவை நீக்குங்கள்

## ஆணைக்குழுவில் சோபித தேரர் முறைப்பாடு

கொழும்பு, ஜூலை 1

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியலிலிருந்து கருணா அம்மானை உடனடியாக நீக்குமாறு தேர்தல் ஆணைக்குழுவிடம், தேசிய புத்திஜீவிகள் சங்க சபையின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார். தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரியவை நேற்றுமுன்தினம் நேரில் சந்தித்தே கடிதத்தை தேரர் கையளித்துள்ளார்.

இது தொடர்பில் ஓமல்பே சோபித தேரர் கூறியதாவது:

கருணா அம்மானின் அறிவிப்பு தொடர்பில் பொலிஸ்மா அதிபர் மற்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவினிரிடம் முறையிட்டுள்ளோம். இந்தநிலையில் அது தொடர்பில் இன்று தேர்தல் ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்யப்பட்டது.

பயங்கரவாத தடைச்சட்டத்தையும், தேர்தல் சட்டத்தையும் மீறும் வகையிலேயே கருணா அம்மானின் கருத்து அமைந்துள்ளது. இவ்வாறு சட்டவிரோதமாக செயற்படும் நபரொருவர் மக்கள் பிரதிநிதியாவது ஏற்புடைய விடயமாக அமையாது.

எனவே, மனிதப் படுகொலை செய்துள்ளதை தானே ஒப்புக் கொண்டுள்ள பயங்கரவாதியான கருணா அம்மான் தேர்தலில் போட்டியிடமுடியாது என்பதால் அவரை வேட்பாளர் பட்டியலில் இருந்து நீக்கவேண்டும் என்றார். (ஒ,5,44)

# நல்லாட்சியில் அரசியல் பழிவாங்கல் 2000

கொழும்பு, ஜூலை 1

நல்லாட்சி அரசின் காலப் பகுதியில் அரசியல் பழிவாங்கலுக்கு உட்பட்டதாகத் தெரிவித்து 2 ஆயிரம் முறைப்பாடுகள் ஜனாதிபதி ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

2015ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி தொடக்கம் 2019ஆம் ஆண்டு நவம்பர் 16 ஆம் திகதி வரை இடம்பெற்றுள்ள அரசியல் பழிவாங்கல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் வகையில் ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.


இதுவரை 2ஆயிரம் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன் 97 முறைப்பாடுகளுக்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசேட பொலிஸ் பிரிவின் மூலம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ஒ,5)

# தபால்மூலம் வாக்களிக்க வடக்கில் 37,538 பேர்

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 24 ஆயிரத்து 829 பேரும், வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 12 ஆயிரத்து 709 பேரும் தபால்மூலம் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் 13,14,15,16,17 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இதற்காக யாழ்ப்பாண மாவட்டத்தில் 21 ஆயிரத்து 239 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 3 ஆயிரத்து 590 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 ஆயிரத்து 381 பேரும், மன்னார் மாவட்டத்தில் 4 ஆயிரத்து 196 பேரும், வவுனியா மாவட்டத்தில் 5 ஆயிரத்து 132 பேரும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். (ஒ,5,110)



# தபால்மூல வாக்களிப்புக்கான வாக்குச் சீட்டுக்கள் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 1

ஓகஸ்ட் 5ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்குச் சீட்டுக்கள் தபால் திணைக்களத்திடம் நேற்றுக் காலை ஒப்படைக்கப்பட்டன. யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்துக்கான தபால்மூல வாக்களிப்புக்குரிய வாக்குச் சீட்டுக்கள், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் வைத்து தபால் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அதேபோன்று கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் மாவட்டச் செயலகங்களில் வைத்து அந்தந்த மாவட்டங்களுக்குரிய வாக்குச் சீட்டுக்கள் தபால் திணைக்களத்தி டம் ஒப்படைக்கப்பட்டன. இந்தப் பணிகள் நாளையும் தொடரும். எதிர்வரும் 13ஆம் திகதி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் சுகாதார அதிகாரிகள் மாத்திரம் தபால் மூல வாக்களிப்பை மேற்கொள்ளவுள்ளனர். 14 மற்றும் 15ஆம் திகதிகளில் ஏனைய அரச திணைக்கள பணியாளர்களுக்கான தபால்மூல வாக்களிப்பு இடம்பெறும். 16 மற்றும் 17ஆம் திகதிகளில் மாவட்டச் செயலகம், முப்படையினர், பொலிஸாருக்கான தபால் மூல வாக்களிப்பு இடம்பெறும். (ஒ,5,111)



# புதிய நாடகங்களை அரங்கேற்றுகிறது அரசு

## ஐ.தே.க குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 1

நாட்டில் அன்றாட வாழ்வியல் சார்ந்து காணப்படும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் மக்கள் கவனம் செலுத்துவதைத் திசை திருப்புவதற்காகத் தற்போதைய அரசாங்கம் உலகக்கிண்ண ஆட்டநிர்ணயம், கருணா அம்மானின் சர்ச்சைக்குரிய கருத்து, மிலேனியம் செலென்ஞ் கோப்பரேஷன் உடன்படிக்கை போன்ற பல்வேறு புதிய நாடகங்களை அரங்கேற்றிக்கொண்டிருக்கிறது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டிலுள்ள உண்மையான பிரச்சினைகளைப் புறந்தள்ளி, அவற்றின் மீது மக்களின் கவனம் திரும்பாது இருப்பதற்காகவே அரசாங்கம் இத்தகைய புதிய நாடகங்களை நடத்துகின்றது. உண்மையான பிரச்சினைகளிலிருந்து மக்களைத் திசைதிருப்புவதற்காக இத்தகைய பொய்யான தகவல்களை வெளியிட வேண்டாமென்று ஆளுந்தரப்பிடம் கேட்டுக்கொள்கின்றேன். அடுத்ததாக தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையை சீரமைப்பதற்கு பணத்தை அச்சடித்து வழங்குவோம் என்று அரசாங்கம் கூறுகின்றது. இது பற்றி சாதாரண மக்களுக்குப் போதிய தெளிவு இருக்காது. ஆனால் அவ்வாறு செய்வதால் பணவீக்கம் அதிகரிக்கும் என்பது பொருளியலைக் கற்றவர்களுக்கு நன்கு புரியும். எமது அரசாங்கத்தில் நாம் அரச சேவையாளர்களின் ஊதியத்தை அதிகரித்த அதேவேளை, பொருள்களின் விலைகளையும் குறைத்தோம். அதுமாத்திரமன்றி வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்கான பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்தோம். ஆனால் இந்த அரசாங்கமோ ஒரு முறையான பொருளாதாரத் திட்டமிடலின்றி செயற்படுகிறது. பொருளாதாரம் குறித்த அடிப்படை அறிவற்ற இவ்வரசினால் ஒருபோதும் அதனைச் சீரமைக்க முடியாது. இப்போது நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு, அதனால் மக்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படாவிட்டாலும் பசியினால் அவர்கள் இறக்கும் நிலையேற்படப் போகின்றது- என்றார். (ப)

# கட்சிகளை விமர்சிப்பது ஆரோக்கியமானதல்ல

## தபேந்திரன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 1

கட்சிகளை விமர்சித்து அரசியலை முன்னெடுக்கலாம் என நினைப்பது அரசியல் ஆரோக்கியமற்றது. அதனை விடுத்து நாம் என்ன செய்யப் போகின்றோம் என மக்கள் மத்தியில் தெளிவாகக் கூறி அரசியலை முன்னெடுக்க வேண்டும் என யாழ்ப்பாணம் கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளராகப் போட்டியிடும் வேதநாயகம் தபேந்திரன் தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

எனது அரசியல் பிரவேசமானது திடீரென ஏற்பட்டது. எனது தந்தை உட்பட குடும்பத்தினர் தொழிற்சங்கள் , அரசியலில் ஈடுபட்டிருந்தவர்கள். இந்த நிலையில் புதுமுக வேட்பாளராக தமிழ் அரசுக் கட்சி என்னை நாடாளுமன்றத் தேர்தலில் களமிறக்கியுள்ளனர்.

எனது இலக்கு அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி , அபிவிருத்தியை முன்னெடுத்து செல்வதுடன், சிங்கள மக்களிடமிருந்து கௌரவமான தமிழ்த் தேசியத் தீர்வைப் பெற்றுக் கொள்வதாகும். போட்டிக் கட்சிகள் தாம் என்ன செய்யப் போகின்றோம். எனச் சொல்லாது கட்சிகளை விமர்சித்து தமது அரசியலை முன்னெடுத்துச் செல்கின்றன இது ஆரோக்கியமானதல்ல- என்றார். (ஐ-20)

# தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் முக்கிய அறிவிப்பு!

கொழும்பு, ஜூலை 1

இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் எதிர்வரும் காலங்களில் மேல் மாகாணத்தில் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படவுள்ளது என்று அந்தச் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதத்துக்கான மாதாந்த பயண அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளுமாறு மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையால் மேற்கொள்ளப்படும் தொடர் அழுத்தம் காரணமாகவே இந்தப் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் பேருந்து உரிமையாளர்கள் பெரும் நிதி நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர். அடுத்த மாதத்துக்கான மாதாந்தப் பயண அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு அழுத்தம் கொடுப்பது அநீதியானது என கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார். (எ-ரி2)

# பகல்நேரப் பராமரிப்பு நிலையங்கள் ஜூலை 6 முதல் முழுமையாகத் திறப்பு

கொழும்பு, ஜூலை 1

கொரோனா வைரஸ் காரணமாக மூடப்பட்டிருந்த பகல் நேர சிறுவர் பராமரிப்பு நிலையங்களை எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் முற்றுமுழுதாக மீண்டும் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி இந்த நிலையங்களை மீண்டும் திறக்க அனுமதி வழங்கப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். தற்போது, பகல் நேர சிறுவர் பராமரிப்பு நிலையங்களை, சிறுவர்களின் எண்ணிக்கையில் 75 சதவீதமானோர்களுடன் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் முற்றுமுழுதாக சிறுவர்களை உள்ளடக்கியவாறு திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (எ-ரி2)

# விஸ்டன் சஞ்சிகையில் முரளி; வாழ்த்துகின்றார் கோத்தா!

கொழும்பு, ஜூலை 1

முத்தையா முரளிதரனை 21 ஆம் நூற்றாண்டின் மிகப் பெறுமதியான இலங்கையின் முன்னாள் டெஸ்ட் கிரிக்கெட் வீரர் என உலகின் மிகவும் பிரபல்யமான சஞ்சிகையான விஸ்டன் சஞ்சிகை பெயரிட்டுள்ளது.

அதற்காக முரளிதரனுக்கு ஜனாதிபதி வாழ்த்து தெரிவித்துள்ளார். இலங்கைக்கு பெருமை சேர்ப்பதற்காக முத்தையா முரளிதரன் எப்போதும் தன்னை அர்ப்பணித்துள்ளார். அவரது இந்த சாதனைக்கு அவரை நான் மனதார வாழ்த்துகின்றேன் என்று அவர் கூறியுள்ளார். (எ-ரி1)

# கைதான 1,280 பேருக்கும் முகக் கவசங்களை வழங்கிய பொலிஸார்

கொழும்பு, ஜூலை 1

முகக் கவசம் அணியாது பொது இடங்களில் நடமாடிய ஆயிரத்து 280 பேர் அவர்களது வீடுகளில் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கு வைரஸ் தொற்றுத் தொடர்பில் அறிவுரை வழங்கிய பொலிஸார் முகக் கவசங்களையும் பெற்றுக்கொடுத்துள்ளனர். கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக முகக்கவசம் அணியாமல் பொது இடங்களில் காணப்படும் நபர்கள் கட்டாயம் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்ற நடைமுறையை பொலிஸ் தலைமையகம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் நடைமுறைக்குக் கொண்டு வந்தது. இந்த நிலையில் மேல் மாகாணத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆயிரத்து 280 பேர் முகக் கவசம் அணியாத குற்றத்துக்கு சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர். (ஐ)

# கந்தளாய்வாசி சவூதியில் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூலை 1

சவூதி அரேபியாவில் திருகோணமலை கந்தளாய்ப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் காய்ச்சல் காரணமாக நேற்று திடீரென உயிரிழந்துள்ளார். இது தொடர்பில் சவுதி அரேபியாவிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் ஊடாக குறித்த நபரின் மனைவிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கந்தளாய், பேராறு பகுதியைச் சேர்ந்த அப்துல் ஹையூன் (வயது53) என்பவரே உயிரிழந்துள்ளார். சடலத்தை நாட்டுக்கு கொண்டுவருவதா அல்லது சவூதியில் நல்லடக்கம் செய்வதா போன்ற நடவடிக்கைகளை தூதரகம் ஊடாக உறவினர்கள் மேற்கொண்டு வருகின்றார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-ரி2)

# இரண்டு இடைவேளைகளில் 500 மாணவருக்கு கற்பித்தல்

## அனுமதி வழங்கினார் கோத்தா

கொழும்பு, ஜூலை 1

இரண்டு இடைவேளைகளின் அடிப்படையில் 500 மாணவர்களுக்கு கற்பிப்பதற்காக சுகாதார நிபுணர்களினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சுகாதாரத் தரப்பினரின் ஆலோசனைக்கமைய இதற்கான அனுமதியை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வழங்கியுள்ளார்.



கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மூடப்பட்ட மேலதிக வகுப்புக்களை, மீளத் திறப்பதில் ஏற்படுகின்ற சிக்கல்கள் தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப்பரீட்சை, சாதாரணதரப் பரீட்சை மற்றும் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை தினங்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு பரிசீலிக்குமாறு தொழில்சார் விரிவுரையாளர்கள் சங்கத்தினர் ஜனாதிபதியைக் கேட்டுக் கொண்டனர் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்களுடனான முழுமையான ஆய்வுக்குப் பின்னர், பரீட்சைக்கான திகதிகளை நிர்ணயிப்பதை மீள்பரிசீலனை செய்யுமாறு கல்வி அமைச்சருக்கு ஜனாதிபதி இதன்போது ஆலோசனை வழங்கியுள்ளார் என்றும் ஊடகப்பிரிவு தெரிவித்தது. (ப)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# காணாமலாக்கப்பட்டோரும் இராணுவத் தளபதியும்

அண்மையில் கொழும்பில் தமிழ் ஊடகமொன்றுக்கு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திரசில்வா வழங்கிய செவ்வியொன்றில் விடுதலைப் புலி உறுப்பினர்களைப் புலிகளே கொன்றனர் எனவும் அப்படிக் கொல்லப்பட்ட உடல்களை மறைத்தனரெனவும் அப்படி மறைக்கப்பட்டவர்களை தாம் எப்படிக் கண்டறிய முடியுமெனக் கேள்வி எழுப்பியதுடன் காணாமலாக்கப்பட்டவர்களில் அவர்களும் உள்ளடங்கலாமெனத் தெரிவித்திருந்தார். இவை புதிய வார்த்தைகளல்ல!

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பல மாதங்களுக்கு முன்பே காணாமற் போனோரென எவரும் இல்லை எனவும் அப்படி யாராவது காணாமற் போயிருந்தால் அவர்கள் போரில் இறந்திருக்கலாம் அல்லது வெளிநாடுகளுக்கு ஓடியிருக்கலாம் எனவும் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸவோ காணாமற் போனோர் என எவருமில்லை எனவும் அவர்களைத் தேடுவதானால் மண்ணுக்குள்தான் தேட வேண்டும் எனவும் கூறியிருந்தார்.

அவர்கள் போரில் இறந்திருந்தால் அவர்களின் உயிரற்ற உடல்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றியோ முள்ளிவாய்க்காலில் படையினரின் உறவினர்களால் ஒப்படைக்கப்பட்டவர்கள் வெளிநாடு போயிருந்தால் அவர்கள் யாரால், எப்படி, எதற்காக அனுப்பப்பட்டார்கள் என்பது தொடர்பாகவோ கோத்தாபய எதுவும் சொல்லவில்லை.

அவர்களை மண்ணுக்குள் தான் தேட வேண்டுமானால்அவர்கள்யாரால்எப்போதுபுதைக்கப்பட்டனர் என்பது பற்றி விமல் வீரவன்ஸ எதுவும் கூறவில்லை. ஆனால் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா ஒரு படி மேலே போய் காணாமலாக்கப்பட்டோரைபுலிகளேகொன்றுபுதைத்திருக்கலாம் எனக் கண்டுபிடித்து விட்டார்.

ஒட்டுமொத்தத்தில் அரச தரப்பினரும் காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தையே மண்ணுள் புதைக்கும் வகையில் கருத்துக்களை வெளியிட்டனர்.

பரணகம ஆணைக்குழுவில் சாட்சியமளித்த காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் தங்கள் முன்னிலையிலேயே தங்கள் பிள்ளைகள் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர், ஈ.பி.டி.பியினர், கருணா குழுவினர் ஆகிய தரப்பினர் கடத்தினர் எனத் தெரிவித்திருந்தனர். அதேவேளையில் பல நூறு போராளிகள் வட்டுவாகலில் வைத்துப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

ஜனாதிபதியோ, அமைச்சர்களோ, இராணுவத் தளபதியோஎவ்வளவுதான்மறைக்கமுயன்றாலும் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பாக அரச தரப்பினரும் அரச ஆதரவுக் குழுக்களும் அரச படையினரும் பதில் சொல்லியேயாக வேண்டும்.

எனவே எதிர்வரும் தேர்தலில் வடக்கு, கிழக்கில் அரச சார்புக் கட்சிகளும் அக்கட்சிகளில் போட்டியிடும் வேட்பாளர்களும் பொறுப்புக்கூறியேயாக வேண்டும்.

குறைந்தபட்சம் ஜனாதிபதி, விமல் வீரவன்ஸ, இராணுவத் தளபதி ஆகியோரின் கருத்துக்கள் பற்றிய உண்மைகளை அவர்கள் நேர்மையாக முன்வைக்க வேண்டும்.

# புதியவர்கள் அரசியலுக்கு வருவதற்கு இடமளியுங்கள்

## சந்திரிகா வேண்டுகோள்



**கொழும்பு, ஜூலை 1**

**தற்போது அரசியல் தலைமைத்துவத்தில் இருக்கும் அனைவரும் ஓய்வுபெற்று, புதியவர்கள் பதவிக்கு வருவதற்கு இடமளித்தால், நாட்டை கட்டியெழுப்ப முடியும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.**

தனது 75 வது பிறந்த தினத்தை முன்னிட்டு, ஹொரவப்பொத்தானை பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

" என்னைப் பலவந்தமாக அரசியலுக்குள் கொண்டு வந்தனர். எனினும் வந்து 5 வருடங்களுக்கு இந்த நாட்டில் உள்ள அரசியல்வாதிகள் எனக் கூறிக்கொண்டு நாடாளுமன்றத்தில் இருக்கும் 225 பேரில் பெரும்பான்மையானவர்கள் இந்த நாட்டை கட்டியெழுப்பமாட்டார்கள் என்பதைப் புரிந்து கொண்டேன். இவர்களில் ஒருவராலும் முடியாது. தாம் வளர்வதற்காக கொள்ளையடிக்கும் நோக்கிலேயே பலர் நாடாளுமன்றுக்குச் சென்றுள்ளனர்.

இப்படியானவர்களுடன் அரசியலில் ஈடுபட நான் விரும்பவில்லை. எனக்கு பேராசையில்லை. ஜனாதிபதியாக பதவி வகித்து வீட்டுக்குச் சென்ற பின்னர், மீண்டும் பிரதமராகப் பதவிக்கு வர வேண்டும் என்ற ஆசை இல்லை. சர்வாதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதியாக பதவி வகித்து விட்டு, நாடாளுமன்ற உறுப்பினராகும் தேவை எனக்கில்லை.

தற்போது அரசியலில் இருக்கும் தலைவர்கள் நடக்க முடியாது உடல் நல குறைவுடன் அரசியலில் ஈடுபடுவதை விட ஓய்வுபெற்று வீட்டுக்குச் சென்று, புதியவர்களுக்கு இடமளித்தால் நாட்டை கட்டியெழுப்ப முடியும் என நான் நினைக்கிறேன் - என்றார். (க)

# 33 பிக்குகள் கொலை உயர் நீதிமன்றில் மனு

அரந்தலாவ பகுதியில் 33 பௌத்த பிக்குகள் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்து முழுமையான விசாரணை நடத்தப்பட்டு, குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டுமென மனுவில் கோரப்பட்டுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த பௌத்த பிக்கு ஒருவர் மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

விடுதலைப்புலிகள் அமைப்பினால் இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், தாக்குதலில் ஈடுபட்டு தற்போது எஞ்சியுள்ள அங்கத்தவர்கள் மீது சட்ட நடவடிக்கையெடுக்க வேண்டும், தனக்கு இழப்பீடாக 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டுமென மனுவில் கோரப்பட்டுள்ளனர்.

சட்டமா அதிபர், பதில் பொலிஸ் மா அதிபர், தேசிய புலனாய்வுப் பிரிவு இயக்குநர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அம்பாறை, அரந்தலாவப் பகுதியில் மர்ம நபர்கள் நடத்திய தாக்குதலில் 31 பௌத்த பிக்குகள் உள்ளிட்ட 33 பேர் உயிரிழந்திருந்தனர். இந்தச் சம்பவத்துக்கு விடுதலைப் புலிகள் மீது அரச தரப்பு குற்றம்சாட்டியது. ஆனால் புலிகள் இந்தத் தாக்குதலை உரிமை கோரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# வேலை நேரங்கள் குறித்த ஆலோசனை

கொழும்பு.ஜூலை 1

கொரோனாத் தொற்றுக் காரணமாக அரசமற்றும்தனியார்பிரிவுகளுக்கான வேலை நேரம் திருத்தம் தொடர்பிலான ஆலோசனை போக்குவரத்துத்துறை அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இது குறித்து நியமிக்கப்பட்ட குழுவினால் ஆலோசனை அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆலோசனையை அமைச்சரவைக்கு முன்வைக்கவுள்ளதாக மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இதனிடையே அரச வேலை ஆரம்பிக்கும் நேரம் 9 மணியாகவும், முடிவடையும் நேரம் 4.45 மணியாகவும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதனிடையே தனியார் துறை காலை 9.45 மணிக்கு ஆரம்பித்து மாலை 6.45 மணி வரை முன்னெடுப்பது குறித்து ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (க)

# இலங்கையுடனான அபிவிருத்தியை உறுதிப்படுத்தியது அமெரிக்கா

இலங்கையுடனான அபிவிருத்தி உள்ளிட்ட இறையாண்மையைப் பாதுகாப்பதற்கு ஆதரவு வழங்குவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவை அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ தொலைபேசியில் தொடர்புகொண்டு கலந்துரையாடியுள்ளார்.

இருவருக்கும் இடையிலான தொலைபேசி உரையாடல் தொடர்பில் தெரிவித்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் மோர்கன் ஓர்டகஸ், "கொவிட் 19 தொற்று நோயை எதிர்த்துப் போராடுவதில் பரஸ்பர ஒத்துழைப்பு, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் நிலையான அபிவிருத்திக்கான பகிரப்பட்ட அர்ப்பணிப்பு குறித்து கலந்துரையாடப்பட்டன.

இதுவரை அமெரிக்கா இலங்கைக்கு சுமார் 6 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான உதவிகளை வழங்கியுள்ளது.மேலும் மனிதாபிமான மற்றும் சுகாதார விடயங்களில் இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்ட கால ஒத்துழைப்புக் குறித்தும் இதன்போது மீளாய்வு செய்யப்பட்டது. பகிரப்பட்ட ஜனநாயக மரபுகள் மனித உரிமைகளுக்கான மதிப்பு, மக்களின், நீண்டகால ஸ்திரத்தன்மை, செழிப்புக்கான நீண்டகால வெளிப்படைத்தன்மையின் முக்கியத்துவம் குறித்தும் கலந்துரையாடப்பட்டதாக அவர் தெரிவித்தார். (ஐ)

# முகக் கவசமின்றி அனுமதித்தால் பேருந்து அனுமதிப்பத்திரம் இரத்து!

கொழும்பு, ஜூலை 1

முகக்கவசம் அணியாத பயணிகள் பயணிப்பதற்கு இடமளிக்கும் பேருந்துகளின் அனுமதிப்பத்திரம் இரத்து செய்யப்படும் என்று மேல் மாகாண போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் பிரசன்ன சஞ் ஜீவ தெரிவித்துள்ளார்.

முகக் கவசம் அணியாமல் பேருந் துகளில் பயணிகளை ஏற்றும் நடத்துநர்களுக்கு எதிராக கடுமை யான ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

பேருந்துகளில் ஆசனங்களின் எண்ணிக்கைக்கு அமைய பய ணிகளை ஏற்றிச்செல்ல வேண் டும்.

அவ்வாறு செயற்படாமல் பேருந்து களில் தேங்காய் ஏற்றிச்செல்வ தனைப் போன்று பயணிகளை ஏற்றிச் சென்றால் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் கூறியுள்ளார்.

பேருந்துகளில் முகக் கவசம் இல் லாமல் பயணிகளை அழைத்து செல் பவர்களைத் தேடிப் பார்ப்பதற்கு வீதி பரிசோதகர்கள் ஈடுபடுத்தப்பட் டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-ரி1)

## அந்நிய செலாவணியை அதிகரிப்பதே நோக்கம்!

### பந்துல தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 1

இலங்கையிலிருந்து ஏனைய நாடுகளுக்கு அந் நியச் செலாவணி பெருமளவில் செல்வதைக் கட்டுப்படுத்துவதுடன் நாட்டுக்கு வரும் அந்நியச் செலாவணியை அதிகரிப்பதன் மூலம் கொவிட் 19 வைரஸ் தொற்றுப் பரவலின் காரணமாக நிலவும் பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு அதனை முகாமைத்துவம் செய்வதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாட்டுக்கு அப்பால் வெளிநாடுகளில் பெருமள வில் மேற்கொள்ளப்படும் அந்நியச் செலாவணி பரிமாறலைக் குறைப்பதற்கும் நாட்டுக்கு வரும் அந்நியச் செலாவணியை அதிகரிப்பதிலுமுள்ள இடையூறுகளைக் குறைப்பதற்கும் நிதி , பொரு ளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச் சர் என்ற ரீதியில் பிரதமரினால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங் கியுள்ளது. நாட்டுக்கு அப்பால் வெளிநாடுக ளுக்கு பெருமளவில் செல்லும் அந்நியச் செலா வணியை வரையறுப்பதற்கு அமைவான உத்த ரவுகளை உள்ளடக்கி வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவிப்பின் காலத்தை 2020 ஜூலை மாதம் 2ஆம் திகதி தொடக்கம் மேலும் 6 மாத காலத்துக்கு நீடிப்பதற்கு தீர்மானிக்கப்பட் டுள்ளது. இதற்கமைவாக அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதிசெய்வதற்கு எந்தவிதத் தடையுமில்லை. இருப்பினும் தேவையற்ற இறக் குமதியைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை தொடர்ந் தும் மேற்கொள்ளப்படும்- என்றார். (ப)

## இனவாதம் பரப்பி வாக்கு வேட்டை

### முன்னாள் அமைச்சர் ரிஷாத் குற்றச்சாட்டு

வவுனியா, ஜூலை 1

இனவாதங்களைப் பரப்புவதனூடாக வாக்குகளைப் பெற லாம் என்கின்ற கருத்து அண்மைக்காலமாக எமது நாட்டில் இருந்து வருகின்றது என்று முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

இனவாதச் சிந்தனையை வளர்ப்பதனூடாக ஓர் இனத்தின் அழிவை அல்லது ஓர் இனத்தின் வேதனையை இன்னோர் இனத்துக்குச் சொல்லி அதனூடாக வாக்கு சேகரிக்கலாம் என்ற கடந்தகாலச் செயற்பாடுகளை நாங்கள் பார்க்கின் றோம். ஆனால் இன்று கருணாவோடு இணைந்த அணி யினர் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு பேச்சையும் அவரைச் சார்ந்த அரசாங்கத்தைச் சேர்ந்த சிங்கள மக்களிடம் இன் னுமொரு பேச்சையும் பேசுவதை நாங்கள் பார்க்கின்றோம். இந்த நாட்டில் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் ஒற்றுமை யாக வாழ வேண்டும் என்ற உணர்வோடு உள்ளவர்கள் ஒவ்வொரு இனத்துக்கும் ஒவ்வொரு விதமாகப் பேசமாட்டார் கள். ஒவ்வொரு மொழியிலும் ஒவ்வொரு விதமாகப் பேச மாட்டார்கள். ஆகவே நாங்கள் வேண்டிக்கொள்வதெல்லாம். பெரும்பான்மை மக்களும் சிறுபான்மை மக்களும் ஜதார்த் தத்தைப் புரிந்து இந்த நாட்டில் எல்லோரும் ஏற்றுக்கொள் ளக்கூடிய எல்லோரும் ஒற்றுமையாக வாழக்கூடிய ஜனநா யகம் மிளிரக்கூடிய நல்லதொரு ஆட்சிக்காக நல்லதொரு நாடாளுமன்றத்துக்காக வாக்களிக்க வேண்டும். எமது கடமையை மனச்சாட்சியோடும் நேர்மையோடும் எம்மைத் தெரிவுசெய்த மக்களுக்கும் அதேபோல் தெரிவுசெய்யாத மக்களுக்கும் எங்கள் கடமையை ஆற்றியிருந்தோமோ அதுபோலவே எதிர்காலத்திலும் இதைவிட இரண்டு மடங்கு ஆசனத்தை இந்த மக்கள் எமக்குத் தருவார்கள் என்ற நம் பிக்கை எமக்குள்ளது-என்றார் (ப-110)

# மிலேனியம் ஒப்பத்தின் மூலம் அரசாங்கம் தேர்தல் சூதாட்டம்

### சஜித் ஆதரவு அணி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 1

மிலேனியம் சவால் ஒப்பந்தம் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப் பாடு என்ன? என்பதை நாட்டுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்று தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்த நாயக்க, அரசாங்கம் ஒப்பந்தத் தைக் காண்பித்து தேர்தல் சூதாட்டத் தில் ஈடுப்பட்டு வருவதாகவும் குற்றஞ் சாட்டினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் காலங்களிலே தங்களது ஆட்சியில் எம்.சி.சி ஒப்பந்தத்தை நிராகரிப்ப தாக தெரிவித்தவர்கள். ஆட்சிக்கு வந்ததும் ஒப்பந்தத்தை ஆராய்ந்து பார்ப்பதற்காக குழுவொன்றை நிய மித்திருந்தனர். அந்தக் குழுவின் அறிக்கை கிடைக்கப்பட்டுள்ளதாக அறிவித்த இவர்கள். கடந்த அரசாங் கம் ஒப்பந்தத்தை இரு கட்டங்களாக கைச்சாத்திட்டுள்ளதாகவும், அதற் காக அமெரிக்கா நிதி வழங்கியிருப் பதாகவும் தெரிவித்துள்ளனர்.

ஆனால் அமெரிக்கத் தூதரகம் தாங்கள் இவ்வாறு எந்தவொரு நிதி யையும் ஒப்பந்தம் தொடர்பில் பெற் றுக் கொடுக்கவில்லை என்று அறி வித்துள்ளது. அப்படியொன்றால் பொதுத்தேர்தலை இலக்கு வைத்து தான் இவர்கள் இந்த அறிக்கை யைப் பகிரங்கப்படுத்த முயற்சிக் கின்றார்களா? எம்.சி.சி. ஒப்பந்தத்தில் நாட்டுக்குச் சிக்கல்களைத் தோற்று விக்கும் ஏற்பாடுகள் இருப்பதாக ஆளும் தரப்பினரே தெரிவித்திருந் தனர். இந்நிலையில் அரசாங்கம் ஒப்பந்தத்தை காண்பித்து தேர்தல் சூதாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றது.

இந்தச் செயற்பாடுகளை உடனே தவிர்த்துக் கொள்ள வேண்டும். நாட் டுக்கு சிக்கலை ஏற்படுத்தும் இத்த கைய ஒப்பந்தங்களைக் கைச்சாத் திடப் போகின்றார்களா? அல்லது நிராகரிக்கப் போகின்றார்களா? என்பதை அரசாங்கம் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்- என்றார். (ப)



## இன்றைய நாள்



**மேடம்:** முக்கியமான செயல் எளி தாக நிறைவேறும். தொழில், வளர்ச்சி பெற முக்கியஸ்தரின் உதவி கிடைக் கும். பணப்பரிவர்த்தனை அதிக ரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும்.



**இடபம்:** உறவினர்களிடம் விரக்தியுடன் பேச வேண்டாம். தொழில், வியாபா ரத்தில் அளவான மூலதனம் தேவை. நிலுவைப்பணம் வசூலாகும். ஒவ் வாத உணவைத் தவிர்க்கவும்



**மிதுனம்:** மனதில் உறுதி நிறைந்தி ருக்கும். எதிரியால் தொந்தரவு வில கும். தொழில், வியாபாரம் வளர்ச்சி காண கூடுதலாகப் பணிபுரிவீர்கள். கூடுதல் வருமானம் கிடைக்கும்.



**கடகம்:** அண்டை வீட்டார் அன்பு பாராட்டுவர். எதிர்கால வாழ்வில் நம்பிக்கை கொள்வீர்கள். தொழில், வியாபாரம் செழிக்கும். தாராள பண வரவு கிடைக்கும். ஒற்றுமையும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும்.



**சிம்மம்:** மனதில் குழப்பம் ஏற்படலாம். அனு பவத்தை பாடமாகக் கருதி செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் உருவாகும். செலவுக்கேற்ற பணவரவு கிடைக்கும்.



**கன்னி:** சிலர் பயனற்ற வகையில் பேசுவர். சொந்தப்பணியில் அக்கறை காட்டுவது நல்லது. தொழில், வியாபா ரத்தில் குறுக்கிட்ட தடைகளைச் சரி செய் வீர்கள். சீரான பணவரவு கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் தேவை.



**துலாம்:** பெரியோர்களின் சொல்லுக்கு மதிப்புத் தருவீர்கள். தாமதமான பணி புதிய முயற்சியால் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் மூலதனம் செய்வீர்கள். உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும்.



**விருச்சிகம்:** மனதில் புத்துணர்வு ஏற்ப டும். குடும்பத்தினர் ஆதரவாக இருப்பர். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிக ரிக்கும். வெகுநாள்களாகத் தேடிய பொருள் கிடைக்கும்.



**தனுசு:** குடும்பத் தேவைகளில் கவனம் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் மாறுபட்ட தன்மை இருக்கும். வரவை விட செலவு அதிகரிக்கும். உணவு கட்டுப்பாடு நல்லது.



**மகரம்:** முன்யோசனையுடன் செயல்படு வது நல்லது. தொழில், வியாபாரத்தில் அனுகூலம் பாதுகாக்கப்படும். சிக்கனம் அவசியம். தாய்வழி உறவினரால் நன்மை உண்டு.



**கும்பம்:** இஷ்ட தெய்வ அருளால் நன்மை பெறுவீர்கள். செயல்கள் சிறப்பாக நிறை வேறும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும்.



**மீனம்:** மனதில் சஞ்சலம் உருவாகலாம். பணிகளை நிறைவேற்றுவதில் தாமதம் இருக்கும். தொழில், வியாபார வளர்ச் சிக்கு நண்பரின் ஆலோசனை உதவும். சீரான பணவரவு கிடைக்கும்.

## திருநெல்வேலி சந்தையின் மேல்மாடியிலும் வர்த்தகம்!

யாழ்ப்பாணம், ஜூலை 1

திருநெல்வேலி மரக்கறி விற்பனைச் சந்தையின் மேல்மாடியிலும் மரக்கறி விற்பனை இடம்பெற்று வருகின்றது.

கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக சமூக இடைவெளியை பேணும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சந்தைக்கு வலுக்கூடிய மின்சார விளக்குகள் இந்த வாரம் பொருத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-17)

## யாழ்ப்பாணத்தில் சஜித்தின் பிரசாரம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், பிரதமர் வேட்பாளருமான சஜித் பிரேமதாஸா இன்று புதன்கிழமை தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளார்

இங்கு வரும் அவர் இன்று பிற்பகல் 2 மணியளவில் சாவகச்சேரியில் தனது பிரசாரக் கூட்டத்தை ஆரம்பிப்பார்.

அதனைத் தொடர்ந்து நீராவியடி இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி, கோப்பாய் செல்வமஹால் மண்டபம், தாவடி வேலுவிநாயகர் விளையாட்டு கழகம் ஆகிய இடங்களில் பிரசாரக் கூட்டங்களை நடத்தவுள்ளார்.

நாளை வியாழக்கிழமை வட்டுக்கோட்டை வழக்கம்பரை அம்மன் கல்யாண மண்டபம், மானிப்பாய் பிரதேச சபை பொதுக்கூட்டம், சாவற்காடு மகாத்மா சனசமூக நிலையம், காங்கேசன்துறை இராஜேஸ்வரி மண்டபம், உடுப்பிட்டி சித்திவிநாயகர் கல்யாண மண்டபம், இராஜகிராமம், நெல்லியடி, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை அனுசா கல்யாண மண்டபம் ஆகிய இடங்களில் நடக்கும் பிரசார கூட்டங்களில் கலந்து கொள்வார்.

பின்னர் எதிர்வரும் 3 ஆம் திகதி கிளிநொச்சி பலநோக்கு கூட்டுறவு சங்க மண்டபத்தில் நடக்கும் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொள்வார். (க)

# வவுனியாவில் தலைதூக்கும் வாள்வெட்டுகள்


### பொலிஸார் நடவடிக்கை எடுப்பார்களா?

வவுனியா, ஜூலை 1

**வவுனியாவில் அண்மைக்காலமாக வாள்வெட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற வாள்வெட்டு மற்றும் அடிதடிச் சம்பவங்களில் ஐந்து பேர் காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.**

மகாறம்பைக்குளம், பூந்தோட்டம், சிறிநகர் போன்ற பகுதிகளிலும் அண்மைய நாள்களில் பல்வேறு வாள்வெட்டுக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த சில நாள்களாக வவுனியாவில் வாள்வெட்டு மற்றும் இளைஞர் குழுக்களுக்கு இடையிலான அடிதடிச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமையுடன் அவற்றில் அதிகமான சம்பவங்கள் மதுபோதையில் இடம்பெற்றுள்ளன.

குறிப்பாக வீதிகளில் குழுக்களாக ஒன்று கூடும் இளைஞர்கள் இவ்வாறான சம்பவங்களில் ஈடுபட்டுவருகின்றனர். இதனால் வீதிகளில் பயணிக்கும் பொதுமக்கள், முதியவர்களும் பல்வேறு அசௌகரியங்களிற்கு முகம் கொடுத்து வருகின்றனர். இவை தொடர்பாக பொலிஸார் கூடிய கவனமெடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் மற்றும் நலன் விரும்பிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-110)



பசுமைச் சூழலுடன் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரப் பாதுகாப்புடன் உடுவில் மகளிர் கல்லூரியில் கைகளைக் கழுவுவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (க)

## இந்த வாரத்தில் வீதி விளக்குள்!

யாழ்ப்பாணம், ஜூலை 1

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள சில வீதிகளுக்கு வீதி விளக்குகள் இந்த வாரத்தில் பொருத்தப்படவுள்ளன.

இதற்கென சபையால் புதிதாக சுமார் 200 எல்.ஈ.டி வீதி விளக்குகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்று சபையின் தவிசாளர் த.தியாகமூர்த்தி தெரிவித்தார். பழுதடைந்து ஒளிராமல் இருக்கும் வீதி விளக்குகளை மாற்றியமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. (ம-17)

## பரீட்சைப் பெறுபேறு மீளாய்வு விண்ணப்பம்

கொழும்பு, ஜூலை 1

2019 டிசெம்பரில் இடம்பெற்ற கல்வி பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளை மீள் பரிசீலனை செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. எதிர்வரும் ஜூலை 17ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களைத் தபால் ஊடாக அனுப்பிவைக்குமாறு கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. இது தொடர்பான மேலதிக விவரங்களை www.doenets.lk என்ற இணையத்தளத்தில் பார்வையிட முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

*நீர்வேலி*

## வாழைக்குலை சந்தையில் முகக் கவசம் கட்டாயம்!

யாழ்ப்பாணம், ஜூலை 1

நீர்வேலி வாழைக்குலை விற்பனை சந்தைக்குள்ளே செல்பவர்கள் கட்டாயம் முகக் கவசம் அணிந்து செல்லவேண்டும் என்று நிர்வாகம் அறிவித்துள்ளது.

முகக் கவசம் அணிந்து நடமாடுவது நாடெங்கிலும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மீறுபவர்கள் 14 நாள்கள் தனிமைப் படுத்தப்படுகின்றனர். இந்த நிலையிலேயே நீர்வேலி வாழைக்குலை சந்தையில் மேற்படி நடைமுறை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. முகக் கவசம் அணியாது வருபவர்கள் சந்தைக்குள் நுழைவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-17)

## படகு பழுதானதால் 3 நாள்களாக தத்தளித்த 4 இந்திய மீனவர்கள்!

கொழும்பு, ஜூலை 1 விசைப்படகு பழுதானதால் கடந்த மூன்று நாள்களாக நடுக்கடலில் தத்தளித்த இந்திய மீனவர்கள் நால்வரை மீட்ட இலங்கைக் கடற்படை, அவர்களை இந்திய கடலோர காவல்படையிடம் ஒப்படைத்தது.

ராமேஸ்வரத்தை சேர்ந்த கிருஷ்ணவேணி என்பவருக்குச் சொந்தமான விசைப்படகில் ராமேஸ்வரம் பகுதியை சேர்ந்த செல்வகுமார், பசீர், அண்ணாதுரை, சீனி ஆகிய நான்கு மீனவர்கள் கடந்த சனிக்கிழமை காலை ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து மீன் பிடிக்கச் சென்றனர். படகின் இயந்திரம் பழுதடைந்ததை அடுத்து மீனவர்கள் நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை மாலை கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர் மீனவர்களையும், படகையும் மீட்டு சர்வதேச கடல் எல்லையில் வைத்து விசாரணை நடத்தி பின் இந்திய கடற்படையிடம் ஒப்படைத்தனர். (ம-56)



## சாரதிகள் நால்வருக்கு ரூபா 1,25,000 தண்டம்

சாவகச்சேரி, ஜூலை 1

மதுபோதையில் வாகனம் செலுத்திய சாரதிகள் நால்வருக்கு ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் மதுபோதையில் வாகனம் செலுத்திய மூவருக்கும், மதுபோதையில் சாரதி அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய நபருக்கு எதிராக சாவகச்சேரி நீதி மன்றில் வழக்குகள் தாக்கல். செய்யப்பட்டன.

குறித்த வழக்குகள் நேற்று தனித்தனியாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

சாரதிகள் நால்வரும் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். மதுபோதையில் வாகனம் செலுத்திய மூவருக்கு தலா25 ஆயிரம் ரூபா வீதமும், மதுபோதையில் சாரதி அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய நபருக்கு 50 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

## மேன்முறையீட்டு மனுவை மீளப் பெற்றார் ராஜித

முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவினால் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணை நிராகரிப்பு தொடர்பான மேன்முறையீட்டு மனு, நேற்று அவரினால் மீளப் பெறப்பட்டுள்ளது. அந்த மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே மீளப்பெறப்பட்டுள்ளது.

தனது கட்சிக்காரர் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என மேலும் இம்மனுவை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல விரும்பவில்லை எனவும், ராஜித சேனாரத்ன சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார். குறித்த விடயம் தொடர்பான வழக்கில் பிணை இரத்துச் செய்யப்பட்ட ராஜித சேனாரத்ன கடந்த மே மாதம் 13ஆம் திகதி கைது செய்யப்பட்டு, ஜூன் 10ஆம் திகதி கொழும்பு மேலதிக நீதிவானினால், ரூபா 5 இலட்சம் கொண்ட இரு சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டிருந்தார். (ஐ)

# பெருந்துயரைத் துடைக்கும் கொடையாளர்கள்





கனடா மொன்றியல், லவால் ஸ்ரீ கற்பக மஹா கணபதி ஆலய தொண்டர்களின் அனுசரனையுடன் வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத்தால் 100 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் அண்மையில் வழங்கப் பட்டன. (ம)



முல்லைத்தீவு மாவட்டம் மாங்குளம் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் கோரிக்கைக்கு அமை வாக பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய 20 குடும்பங்களுக்கு வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால் உலர் உணவுப் பொதிகள் வழங்கப் பட்டன. (ம)



கனடாவாழ் புலம்பெயர் குடும்பமொன்றின் நிதி உதவியில், கோண்டாவில் கிழக்கு அற்புத நர்த் தன விநாயகர் சனசமூக நிலையத்தினதும் குமரன் விளையாட்டுக் கழகத்தினதும் உயர்த்தும் கரங்கள் செயற்றிட்டம் ஊடாக முள்ளந்தண்டுவடம் பாதிக் கப்பட குழந்தையொன்றுக்கு சக்கரநாற்காலி அண்மையில் வழங்கப்பட்டது. (ம)



முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக் கப்பட்ட உறவுகளின் 33 குடும்பங்களுக்கு வட் டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால் அண்மை யில் உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. (ம)



முல்லைத்தீவு ஐயன்குளம் பாடசாலைக்கு ஆறு துவிச்சக்கர வண்டிகள், செயல் அமைப்பினால் வழங்கப்பட்டன. மிகவும் தூரப்பிரதேசத்திலிருந்து வரும் மாணவர்கள் துவிச்சக்கர வண்டி இல்லாத காரணத்தால் பாடசாலைக்கு ஒழுங்காக வரமுடி யாத நிலைமை இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்ட தைத் தொடர்ந்து இந்தத் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. (ம)



முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட விஸ்வமடு தொட்டியடி பகுதியில் வசித்துவரும் வறுமைக்குட் பட்ட குடும்பம் ஒன்றுக்கு நல்லின பசுமாடு வழங் கப்பட்டது. பிரிட்டனில் இயங்கும் புலம்பெயர் அமைப்பின் நிதி உதவியில் இந்த உதவி வழங் கப்பட்டது. (ம-222)



மலேசியா தமிழர் பேரவையின் நிதியுதவியில் செரண்டிப் சிறுவர் இல்லத்தின் ஊடாக ஆதரவற்று தனிமையில் வாழும் 70 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம-159)



சூடாமணி படத்தயாரிப்பு நிறுவனத்தின் தயாரிப்பாளர் பி. சூடாமணியால் வறிய நிலையில் உள்ள ஐம்பது குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் அண்மையில் வழங்கப்பட்டன. (ம-159)

# முகக் கவசங்களில் பிரசாரம்; தவிர்க்குமாறு கோரிக்கை

**கொழும்பு, ஜூலை 1**
**அரசியல்வாதிகள் சிலர் தங்களின் விருப்பு எண்களையும் கட்சி சின்னங்களையும் பொதுமக்களிடையே விநியோகிக்கும் முகக் கவசங்களில் அச்சிடும் நடவடிக் கையைத் தேர்தல் வன்முறை கண்காணிப்பு நிலையம் கண்டித்துள்ளது.**

இது தொடர்பில் அந் நிலையத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் மஞ்சுல கஜநாயக்க கருத்து தெரிவித்ததா வது:

'சுகாதார அவசரகால நடவடிக்கை களின்போது அரசியல் நன்மைகளைப் பெற முயற்சிப்பதை அரசியல்வாதி கள் தவிர்க்கவேண்டும்.

அரசியல்வாதிகள் இத்தகைய நடவ டிக்கைகளில் இருந்து விலகி சரியான முறையில் தேர்தல் பிரசாரத்தை நடத்த வேண்டும்.

சில தரப்பினர் தங்களது விருப்ப எண் களையும் கட்சி சின்னங்களையும், முகக் கவசங்களில் அச்சிட்டுள்ள மையை அவதானித்தோம். இது ஏமாற்றமளிக்கிறது. சுகாதார நெருக் கடியின் போது இத்தகைய நடவடிக் கைகளை நாம் தவிர்க்க வேண்டும். இது போன்ற நடவடிக்கைகளால் வாக் காளர்கள் திகைத்துப் போவார்கள். எனவே, வேட்பாளர்கள் இத்தகைய நடவடிக்கைகளில் இருந்து விலகி இருக்க வேண்டும்- என்றார்.

வடக்கு மாகாண முன்னாள் முதல மைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் உருவப்படம் பொறித்த முகக் கவசங் களை அவரது ஆதரவாளர்கள் என்று தெரிவிக்கும் சிலர் விநியோகித்து வரு கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## டி.ஐ.ஜியின் மகளுக்கு 14 நாள்கள் தனிமை

கொழும்பு, ஜூலை 1
சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹணவின் மகள், துருணி 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

பெலாரஸ் நாட்டில் உயர்கல்வியைத் தொடர்ந்த இவர், கடந்த ஞாயிற்றுக்கிழமை நாடு திரும்பினார்.

ஆரம்ப கட்ட பரிசோதனைகளின் பின்னர், தற்போது 14 நாள்களுக்கு தனிமைப்படுத்தப் பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை மே மாதம் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹணவின் மகள், இலங் கைக்குத் திரும்பியுள்ளதுடன், அவர் தனி மைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படாமல், அவ ரது தந்தையால் வீட்டுக்கு அழைத்துச் செல் லப்பட்டுள்ளார் என்று சமூக வலைத்தளங்க ளில் செய்திகள் வெளிவந்தன.

எனினும், கல்வி நடவடிக்கைகள் ஜூன் மாதமே நிறைவடைந்தன. தான் இலங் கைக்கு வருகை தந்து, தனிமைப்படுத்தலை முன்னெடுக்கவில்லை என்று வெளிவரும் செய்திகளில் எவ்வித உண்மையுமில்லை என்று பெலாரஸ் நாட்டில் இருந்து, அஜித் ரோஹணவின் மகள் துருணி, காணொலி மூலம் தெளிவுபடுத்தினார் என்பது குறிப்பி டத்தக்கது. (க)

## செயற்றிட்ட உதவியாளர்கள் ஜனாதிபதி, பிரதமருக்கு மனு

மன்னார், ஜூலை 1
மன்னார் மாவட்டத்தில் நிய மனம் செய்யப்பட்ட பயிலு நர் செயற்றிட்ட உதவியா ளர் அனைவரும் ஒன்றி ணைந்து நேற்று செவ் வாய்க்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்துக்குச் சென்று ஜனாதிபதிக்குரிய மனுவை, மன்னார் மாவட் டச் செயலரிடம் கையளித்த னர்.



கடந்த வருடம் வழங்கப்பட்ட செயற்றிட்ட உதவியாளர்கள் நியமனம் தற்காலிக மாக கடந்த வருடமே நிறுத்தி வைக்கப் பட்டது.

தேசிய கொள்கைகள் பொருளாதார விவகாரங்கள் மீள் குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சினூடாக பயிலு னர் செயற்றிட்ட உதவியாளர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமனம் வழங் கப்பட்டது. எனினும் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்ற காரணத்தால் குறித்த நிய மனம் உடனடியாக தற்காலிகமாக நிறுத் தப்பட்டது. எனினும் தேர்தல் முடிவ டைந்து பல மாதங்களாகியும் அவர்க ளுக்கான நியமனம் மீண்டும் வழங்கப் படவில்லை.

இந்த நிலையில் தமக்கு இதுவரை எவ் வித பதிலும் கிடைக்காத நிலையில் அகில இலங்கை செயற்றிட்ட உதவியா ளர் சங்கம் சார்பாகவும் மன்னார் மாவட்ட செயற்றிட்ட உதவியாளர்கள் சார்பாகவும் ஜனாதிபதிக்கும், பிரதமருக் கும் அனுப்பி வைக்கும் வகையில் மனுக் கையளிக்கப்பட்டது.

இது தொடர்பில் மாவட்டச் செயலர் தெரி வித்ததாவது:

கடந்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறுவதற்கு முன்னர் குறித்த நியமனம் வழங்கி வைக்க இருந்த போது, தேர்தல் ஆணைக்குழுவினால் நியமனங்கள் ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் குறித்த நியமனம் வழங்கப்ப டவில்லை.

இது தொடர்பில் ஜனாதிபதிக்கும், பிரதம ருக்கும் வழங்கவேண்டிய மனு உடன டியாக அனுப்பி வைக்கப்படும். அத னைத்தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்வோம்- என்றார். (க-56)

## பெருஞ்சாந்தி பெருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 1
நாவற்குழி ஸ்ரீ சித்தி விநாய கர் திருக்கோயிலில் புதிதாக அமைக்கப்பெற்ற பஞ்சதள திருக்கோபுரத்துக்கும், புன ராவர்த்தனம் செய்யப்பட்ட நவகுண்ட மூலவர்-கருவ றைக்குமான பெருஞ்சாந்தி பெருவிழா நாளை வியாழக் கிழமை நடைபெறவுள்ளது.

முற்பகல் 11.26 மணி தொடக் கம் 12.57 மணிவரையான சுபவேளையில் பெருஞ்சாந்தி பெருவிழா நடைபெறவுள் ளது. கடந்த சனிக்கிழமை பூர் வாங்கக் கிரியைகள் ஆரம்ப மாகி நடைபெற்றுவருகின்ற நிலையில் இன்று புதன்கி ழமை 3 மணிவரை எண் ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறவுள்ளது என்று ஆலய நம்பிக்கைப் பொறுப்புச் சபையினர் தெரி வித்துள்ளனர். (ஐ)

## கிருமித் தொற்று நீக்கும் கருவிகள் கையளிப்பு

கிண்ணியா, ஜூலை 1
கிண்ணியா வலயக் கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட 10 பாடசாலைகளுக்கு கிருமித் தொற்று நீக்கும் கருவிகள் நேற்றுமுன்தினம் கையளிக் கப்பட்டன. அல் ஹித்முலுல் உம்மா பவுண்டே சன் நிறுவனத்தின் நிதியுதவியில் அதன் பணிப் பாளர் பாதிஹ் கஸ்ஸாலியால் கிண்ணியா பிரதேச செயலக மண்டபத்தில் வைத்து இந்தக் கருவிகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் பாடசாலை அதிபர்கள் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார நடைமுறைகள் மற்றும் டெங்கு கட்டுப்பாடு பற்றி கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் ஏ.எம்.எம்.அஜீத் விளக்கமளித்தார். அத்துடன் தெளிகருவியின் பயன்பாடு, முக்கியத்துவம் பற்றியும் தெளிவுப டுத்தினார். (ஐ)



## 70 வயது யானை உயிரிழப்பு!

கேகாலை, ஜூலை 1
கேகாலைமொலகொட மில்லன்கொட யானை கள் சரணாலயத்தில் யானை ஒன்று நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளது.

ஜயந்தி என்று அழைக் கப்பட்ட குறித்த யானை தலதா மாளிகையின் எசல பெரஹெர நிகழ்வு களுக்காக பல சந்தர்ப் பங்களில் ஈடுபடுத்தப்பட் டுள்ளது. உயிரிழக்கும் போது இந்த யானைக்கு 70 வயது என்று தெரி விக்கப்பட்டது. (எ-ரி1)

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 39 பேர் கைது!

கொழும்பு, ஜூலை 1
மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் கீழ் 39 பேர் நேற்று கைது செய் யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரி வித்துள்ளது. தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறிய ஆயிரத்து 441 பேருக்கு கடும் எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது என்றும், கைது செய்யப்பட்ட 39 பேருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி2)

## கடந்த வாரம் மட்டும் மூவருக்கு மலேரியா



கொழும்பு, ஜூலை 1
மூன்று மலேரியா நோயாளர்கள் கடந்த வாரத்தில் மட்டும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதி வரையில் 13 பேர் மலேரியாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்று மலேரியா ஒழிப்பு இயக்கம் தெரிவித்துள்ளது.

மலேரியாத் தொற்றாளர்கள் மூன்று பேரில் ஒருவர் தம்புள்ளை பெல் வெஹெர தனிமைப்படுத்தல் நிலையத்தில் கடந்த வாரம் இனங்காணப் பட்டுள்ளார். ஏனைய இருவரும் தம்பதிவ யாத்திரைசென்று நாடு திரும் பியவர்கள் என்பதுடன் அவர்கள் இவ்வாறு யாத்திரைசென்று 10 மாதங்களுக்கு பின்னர் மலேரியாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என் றும் தெரிவிக்கப்பட்டது. (எ-ரி1)

# கனவுகளைச் சுமப்பது விடுதலைக்கே!

வன்னிமகள்
எஸ்.கே.சஞ்சிகா

இற்றைக்கு 50 வருடங்களைக் கடந்த கறுப்பு வெள்ளைத் திரைப்படமான The Battle of Algiers 1966 இல் வெளிவந்தது. உலகப் புகழ் பெற்ற நெறியாளரான Gillo Pontecorvo அவர்களின் அருமையான திரைப்படங்களில் இதுவும் ஒன்று. 1950 இல் அல்ஜீரிய மண்ணில் காலடி பதித்த பிரான்ஸ் படைகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த இளைஞர்கள் கரந்தடிப் போர் முறையான, மறைந்திருந்து தாக்கும் போரியலோடு ஆரம்பித்து , தமது சுதந்திர மீட்புக்காக போரிடுகிறார்கள். கட்டுப்பாடுகளையும் அடக்குமுறைகளையும் தகர்த்து இந்த விடுதலைப் போராட்டத்தில், முஸ்லிம் இளைஞர்களோடு பெண்களும் பங்கெடுத்த சிறப்பான வரலாற்றுப் பதிவை வெளிப்படுத்தும் படம் இதுவாகும். இதில் விசேடமாக இந்த முஸ்லிம் பெண்கள், சாதாரண முஸ்லிம் பெண்களைப் போலல்லாமல் பிரான்ஸியப் பெண்கள் போல குட்டையான முடி அலங்காரமும் முக்காடும் நீக்கி, நடையிலும் உடையிலும் மாற்றத்தை ஏற்படுத்தி, பூக்கூடைகளில் திட்டமிட்ட நேரத்தில் வெடிக்கும் குண்டுகளைக் காவிச் சென்று பிரஞ்சுப் படைகள் ஒன்றுகூடுமிடங்களில் வெடிக்க வைக்கிறார்கள். ஒரு இன விடுதலைப் போருக்கு பெண்களின் பங்களிப்பு மிக முக்கியம் வாய்ந்தது என்பதை அல்ஜீரிய முஸ்லிம் பெண்கள் வாழ்ந்து காட்டிய வரலாற்றைச் சொல்கிறது இந்தப் படம்.




பிரான்ஸ் படைகளும் இடைவிடாமல் விடுதலைப் போராளிகளைக் கொன்று குவிக்கின்றன. ஆனால் போராளிகளும் சளைக்காது போரிடுகிறார்கள். இங்கு வியத்தகு விடயம் போராளிகளோடு மக்கள் நெருக்கமாக இருந்து பாதுகாத்து உணவளித்து காக்கின்றார்கள். மக்கள் தம் விடுதலைக்கான போர் என்பதை உணர்ந்த தன்மையை இந்தப் படம் எடுத்துக் காட்டுகிறது.

தமது மக்களின் விடுதலைக்காகப் போராடிய போராளிகளை, பிரான்ஸ் படையினர் கைது செய்து மிகவும் கொடூரமான முறையில் சித்திரவதை செய்கிறார்கள். கைதிகளாகப் பிடிபட்ட போராளியிடம் " உங்கள் பெண்கள் ஏன் பூக்கூடைகளில் குண்டுவைத்து கொல்கிறார்கள்" என்ற கேள்விக்கு

"நீங்கள் வைத்திருக்கும் ஹெலிகொப்டரைத் தாருங்கள் பூக்கூடைகளை கைவிடுகிறோம் "என துணிந்து பதில் கூறுகிறான் போராளி ஒருவன். இறுதியில் போராட்டம் அடக்கப்படுகிறது. தலைவர்கள் மிகக் கொடூரமாகக் கொல்லப்படுகிறார்கள். பலர் புலம்பெயர்ந்தும், அரசியல் தஞ்சம் கோரியும் வெளியேறுகிறார்கள். போராட்டம் முடிவுக்கு வருகிறது. எல்லாமே முடிந்துவிட்டது என்ற வெறுமை உணர்வு மேலோங்கிக் காணப்படுகிறது.

விடுதலைக்காகப் போராடிய தலைவர்கள் கொல்லப்பட்ட இரண்டு வருடங்களின் பின்னர் அடக்குமுறை அமைதியை உடைத்து, மக்கள் புரட்சி வெடிக்கிறது. அல்ஜீரியா மண்ணுக்கு சுதந்திரமும் கிடைக்கின்றது. இந்தப் படத்தின் சிறப்பம்சங்களில் ஒன்றாக, இந்த மக்களின் வாழ்வியலோடு ஒட்டிப் பிணைந்த குலவை ஒலியையும் சேர்த்து, படத்தின் பின்னணி இசையாக வைத்துள்ளமை. இயல்பான நடிப்பு. மிகைப்படுத்தப் படாத காட்சிகள். மிகைப்படுத்தப்படாத உரையாடல்கள்.




அத்தோடு இந்தப்படத்தில் பிரெஞ்சு இராணுவத்தின் கட்டளைத் தளபதி Colonel Mathieu ஆக நடிப்பது Jean Martin. அவர் ஒருவரே திரைப் படத்துக்காக நடிக்கும் நடிகர். மற்றவர்கள் அந்த நாட்டு மக்களே என்பது இந்தப்படம், மிகச்சிறந்த படமாக காரணமாகியுள்ளது. அதனால் தான் படம் உயிர்த்துடிப்போடு இன்றும் பேசப்படுகிறது.

இதில் இன்னொரு சிறப்பாக, மக்கள் விடுதலையையும் விடுதலைக்காய் உயிர் நீத்த விடுதலை வீரர்களின் கனவையும் மறக்கவில்லை. சோரம் போகாத மக்கள், விடுதலைக்காக போராடி உயிர் நீத்த போராளிகளின் தியாகங்களை மட்டுமே தம் மூச்சிலே சுமந்தமையுமாகும்.

அல்ஜீரிய மக்களின் விடுதலை எப்படி நடந்தது? எவ்வாறு நடந்தது என்பதெல்லாம் இயல்பாக நடந்தவையே. அவர்கள் தமக்காக உயிர்நீத்த போராளிகளின் கனவைச் சுமந்தார்கள். கனவைச் சுமக்கும் மக்களுக்கு விடுதலை கிடைத்தே தீரும் என்பதற்கு அல்ஜீரிய விடுதலை சிறந்த எடுத்துக்காட்டு. அதையே இந்தப் படமும் எடுத்துக்கூறுகிறது.

# குழந்தைகளின் அலறல் கேட்கிறதா?

கே.எஸ்.சிவஞானராஜா

கருவிலிருந்து பத்து வயது வரை குழந்தைகள் அனுபவிக்கும் அலறல்கள், அழுகைகள், வேதனைகள் உடல் உளத் தாக்கங்கள் எதுவுமே (ஒரு சிலவற்றைத் தவிர) அம்பலத்துக்கு வருவதில்லை. சம்பந்தப்பட்டோர் கதிரைகளை விட்டு வெளியில் வந்து தேடிக் கொள்ள முயற்சிப்பதும் இல்லை.

ஒரு கிராமத்தின் மூலை முடுக்குகளிலும் நவநாகரிக மயக்கங்களிலும் சிக்கித்தவிக்கும் குழந்தைகள் (எல்லோருமல்ல) படுகின்ற அலறல்களுக்கு நாம் மருந்து கட்டியேயாக வேண்டும். பெரும்பாலும் குழந்தைகள் அடி, உதை, சூடு, குட்டு, சீண்டல், தீண்டல், கொஞ்சுதல், அளைதல் தடவுதல், அரவணைத்தல், அள்ளிக்கொள்ளுதல், பயமுறுத்தல்; பலாத்காரம் செய்தல், எச்சில்படுத்தல் ஆகிய 14வகையான காயப்படுத்தல்களினால் இந்த உலகையே வெறுத்தொதுக்குகின்றனர்.



ஏன் படைக்கப்பட்டோம் என்று புரியாத வயதிலேயே, என்ன நடக்கிறது, எதற்கு நடக்கிறது ,எப்படி நடக்கிறது ,ஏன் இப்படியாகிறது என்பது அறியாத பருவத்திலேயே பலப்பல நோதல்கள் இடம்பெற்றுள்ளன. இத்தகு இன்னல்களை எப்படிச் சொல்வது என்று விளங்காத தன்மையினால் குழந்தைகள் அந்தரித்து சாவின் விளிம்புக்கு கொண்டு செல்லப்படுகின்றன. பல சம்பவங்கள் வெளியில் தெரிந்து விடக்கூடாதென்று மர்மமான முறையில் நீர் நிலைகளுக்குள் தவறும்படி அகாலமாக்கப்படுகின்றன. மரணம் என்று தீர்ப்பளிக்கப்படுகின்றன. நீதி காலந்தாழ்த்தியே நின்று கொல்கின்றது. உதாரணத்துக்கு ஒரு சம்பவத்தை இங்கு சொல்லலாம்.

மொனராகலை, சியாம்பலாண்டுவை, தொம்பகாவெலை எனும் குக்கிராமத்தில் ஒன்றரை வயதுடைய குழந்தையின் உடம்பிலே,102வரையான சூட்டுக் காயங்கள் இருந்தன என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் குழந்தையின் தாய் தனது கணவனைப் பிரிந்து இன்னுமொரு நபருடன் குடும்பம் நடத்தி வருகிறார். இரண்டாவது கணவரே இக்குழந்தைக்கு சிகரெட்டால் சூடு வைத்துள்ளார்.

சூடு வைத்துக்கொலை செய்ய எடுக்கப்பட்ட முயற்சிக்கு, அந்தக் குழந்தையின் தாயாரும் உடந்தையாக இருந்து வந்துள்ளார். அயல் வீட்டார் குழந்தையின் அலறல் கேட்டு உடனடியாக பொலிஸாருக்குத் தெரிவித்ததையை அடுத்து பொலிஸ் அந்த வீட்டைச் சுற்றி வளைத்து சூடுவைத்த நபரையும், தாயாரையும் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். அந்த ஒன்றரை வயதுக் குழந்தை உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்கிறது.

இது போன்ற சம்பவங்கள் தினம் தினம் கணம் கணம் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன.

- குழந்தைகள் நஞ்சு கொடுத்துக் கொல்லப்படுகிறார்கள்.
- கிணற்றுக் கட்டிலில் விடப்படுகிறார்கள்.
- ஆலயக் குளத்தில் விளையாட விடப்படுகிறார்கள்.
- தவறான தொடர்புகளுக்கு இடையூறாக இருக்கும் குழந்தைகள் தீர்த்துக் கட்டப்படுகிறார்க்ள.
- மூன்றாவது நபருடன் செல்லவும் காணாமல் போவதற்கும் அனுமதிக்கப்படுகிறார்க்ள.
- எரித்துக் கொல்லப்பட்டு தாக்கப்பட்டு மூடப்படுகிறார்கள்.
- கழுத்துத் திருகிக் கொல்லப்படுகிறார்கள்.
- பாலூட்ட மறுக்கப்படுகிறது.
- சரியான உணவு கொடுக்கப்படுவதில்லை.
- தனிஅறையில் அடைத்து வைக்கப்படுகிறார்கள்.
- தண்டவாளத்தில் விளையாட விடப்படுகிறார்கள்.
- மண்ணெய் பெற்றோல் மருந்துகள், வாகனங்கள், ஆயுதங்களை, தீப்பெட்டி, போதைகள், பலாத்காரங்கள் மூலமாக சித்திரவதை செய்து கொலை செய்தல்.
- பிறந்தவுடன் சிசுவைக் கொலைசெய்தல்.
- கருவிலே சிசுவை அழித்தல்.
- உயிரோடு சிசுவை வீதியிலோ வாய்க்காலிலோ, தண்ணீரிலோ, காட்டிலோ, வாகனங்களில் வைத்து விட்டோ ஆழ்துளைக்கிணற்றிலோ வீசிவிடுதல்.
- மிகவும் கொடூரமாக குழந்தையைத் தரையில் அடித்துக்கொலை செய்தல்.

இப்படி அகோரமான சம்பவங்களை இந்த மண் செய்யும் போது சம்பந்தப்பட்ட பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் உரியவாறு விழிப்புணர்வு எச்சரிக்கைகளை மேற்கொண்டிருந்தால் இத்தகைய கொடூரங்களைத் தடுத்திருக்கலாம் என்பதே அறத்தின் தீர்ப்பாகும்.




# 2 மன்னார் விரிகுடா, மன்னார் தீவு

## சூழமைவும் பாதுகாப்பும்

ஆய்வாளர் சின்கிலேயர் பீற்றர்

அடி மரத்திலிருந்து நீர்வேர்கள்(மிண்டி வேர்கள்) மணலிலிருந்து வளியினுள் வெளிநீட்டுகின்ற வேர்களை சுவாச வேர்கள் என்று அழைப்பர். மாந்தை மேற்கு பகுதியில் பெருமளவான கண்டல் வகைகள் காணப்படுகின்றன. கண்டல்கள் மண் அரிப்பைத் தடுப்பதற்கும் காற்றின் வேகத்தைக் குறைப்பதற்கும், முருகைகற்களுக்கு பாதுகாப்பாகவும், கடலினதும், ஓடைகளினதும் வாய்க்காலினதும் பாதுகாப்பு சுவராகவும் இயற்கையாக காணப்படுகின்றது. மன்னார் தீவு சுனாமி யிலிருந்து பாதுகாப்பதற்கு இக்கண்டல் மரங்களும், முருகை கற்களும் முக்கியப்பங்கை வகிக்கின்றன.
மணல் குன்றுகளில் காணப்படும் தாவரங்கள் குறுகியதாகவும், குட்டையானதாகவும் விளங்குகின்றது. இவற்றில் சில இராவணன்மீசை போன்ற கொடிகளும், அருகம்புல், விந்தட்டை போன்ற சிறிய மரங்களும், நாடாகடல்புல், சாந்தளை, நூடில்கடல்புல் போன்றன நடுகுடா, தலைமன்னார், பள்ளிமுனை போன்ற இடங்களில் காணப்படுகின்றன. இவை சூழலில் உள்ள மாசு படிந்த மாற்றங்களுக்கு தாக்குப் பிடிக்க முடியாத தாவரங்களாகும்.
இவற்றைக் கொண்டு நம்முன்னோர் சூழல் மாசுபடுவதை முன்கூட்டியே தெரிந்துகொள்வர். இவற்றின் இலைகளை பெருமளவு மீன் இனங்களும், வேறு விலங்குகளும் உண்பதுடன் கடற்பன்றி அல்லது கடல்பசு ஆகியன இவ்விடங்களை தமது வாழ்விடங்களாகவும் கொண்டுள்ளன.
முருகை கற்பாறை தொடர்கள் இரு அடுக்குலான விலங்குகள் என்பதுடன் சொறிமுட்டை ( Jelly Fish) மற்றும் கடல் அனிமனிகள் (Anemones) ஆகியவற்றிக்கும் தொடர்பினை கொண்டவையாகும். சில முருகைகளில் கடலிலிருந்து கல்சியம் காபனேட்டை CaCo 3 பல்லடியையும் பிரித்து எடுப்பதுடன் அதன் அடியில் கல்சியம் காபனேற் சுரப்பதை காணலாம். இச்சுரப்பிகள் ஒன்று சேர்வதன் மூலம் ஆயிரக் கணக்கான வருடங்களுக்கு முருகைக்கற்பாறை கல்சியம் படிந்த தொடர்களை அமைக்கின்றன. இவை பள்ளிமுனைக்கு அப்பாலும், மன்னார் தீவின் தென்மேற்கு அரிப்பு, சிலாவத்தைத்துறை, வங்காலை மற்றும் தோமையாலுக்கு அருகிலும், கொக்குப்படையான் போன்ற ஆழமற்ற கடலிலும் காணப்படுகின்றன. அண்ணளவாக 100வேறுபட்ட வகைகளைக் கொண்ட முருகைகள் கண்டறியப்பட்டுள்ளன. இவை பவளக்கொடி முருகை, நுண்துளை முருகை, கற்பாறை முருகை என அழைக்கப்படுவதுண்டு. இங்கு இருநூறுக்கு வேறுபட்ட வகைகளை கொண்ட முருகை கற்பார்த்தொடரில் மீன்கள் கண்டறியப்பட்டுள்ளன.
இப்பிரதேசத்தில் 459 பூக்கின்ற தாவரங்களும், 4 தாழ்வகை தாவரங்களும், காணப்படுகின்றன. அத்துடன் குறிப்பாக இப்பிரதேசத்திற்குரிய 8 பூக்கின்ற தாவரங்கள் உலகில் வேறு எங்கும் காணப்படுவதில்லை என குறிப்பிடத்தக்கது. மன்னார் தீவு பிராந்தியத்தில் காணப்படும் (Baobab) மரங்கள் ஆபிரிக்கா கண்டத்தில் இருந்து கி.பி.700 ஆண்டளவில் ஆரம்ப கால அரேபிய வர்த்தகர்களால் தீவகத்திற்கு கொண்டு வரப்பட்டன.
இவை அடிமரங்களில் நீரை சேமித்து வைக்கின்றன. சில மரங்கள் தடிப்பான பகுதியைச்சுற்றி 19.5மீற்றர் வரை சுற்றுவட்டத்தை கொண்டுள்ளது. நீர் இழப்பினை தவிர்ப்பதற்கரக இவை வறட்சியான காலத்தில் இலைகளை உதிர்க்கின்றன.
இவ் இயற்தை தந்த வளங்களை நாம் வெகுவாக பேணிக்காப்பதன் மூலம் கீழ் கண்ட உயிரினங்களை காப்பாற்ற முடிவதுடன், குறிப்பாக இலங்கையில் பதிவு செய்யப்பட்ட கீழ்கண்டவற்றை பாதுகாப்பது எமது தலையாய கடமை.


1. தும்பிகள் - 51
2. வண்ணாத்திப்பூச்சிகள் - 20
3. மீன்கள் - 48
4. ஈரூடக வாழ்வன - 92
5. ஊர்வனங்கள் - 117
6. பறவைகள் - 26
7. முலையூட்டிகள் - 20 மொத்தம் 374 காணப்படுகின்றன.





இலங்கையில் காணப்படுகின்ற சுமார் 170 பறவைகள், வட இந்தியா உட்பட உலகின் வேறு பகுதிகளிலிருந்து புலம் பெயர்ந்தவையாகும். இவற்றில் தலைமன்னாரில் பூநாரை, இலங்கைக்காட்டு கோழி, இரட்டைச்சொண்டு குருவி போன்றவையும், முலையூட்டிகளான முண்டி குரங்கு ( எலி, கீரி, மரநாய்) போன்றனவும் ஊர்வனவற்றில் பச்சைஓணான், உடும்பு, மலைப்பாம்பு இலங்கை குறுங்காற்கல்லி, விரிபாம்பு போன்றனவும், ஈரூடக வாழ்வனவாக வாய் ஒடுங்கிய தவளை, சிறிய தவளை, மரம் மேரிதவளை, இலங்கை காட்டு தவளை, போன்றனவும் நன்னீர் மீன்களான திலாப்பியா, நீலக்கண், இழையிலான மீன், நடைப்புனை மீன், போன்றனவும் முள்ளந்தண்டில்லா தவை வகைகளில் மன்னார் விரிகுடாவிலும் பாக்கு குடாவிலும் 281 வகைகள் அவதானிக்கப்பட்டுள்ளன. இவற்றில் சில மென் உடலமைப்பிலானதாக, வர்ணத்திலானதாக கடல் அனிமனிகளும் , புலிசிப்பி மீன்களும், சிலந்தி சங்கு, கடல் அட்டைகள் ( Sea Cucumbers) போன்றவையும் பிரசித்தமானவையாகும். மீனவர்கள் 122 வகையான மீன்களைப் பிடிக்கின்றனர். இதில் 80 மீன்கள் உணவாகவும், 42 மீன்கள் அலங்கார நோக்கங்களுக்காகவும் பயன்பாட்டில் உள்ளன. மேலும் கழுதைகள், மட்டக் குதிரைகள் (MANNAR PONIES) என்பன மன்னார் தீவில் அரபி வர்த்தகர்களால் கொண்டு வரப்பட்டு தற்போது பல்கிப்பெருகியுள்ளன.

### ஓர் ஆய்வு தொகுப்பு





**கலாசார முக்கியத்துவம்**

பல நூற்றாண்டுகளுக்கு முன் மன்னார் தீவு மணல் சார்ந்த ( Regasol) சிறு தீடையாக காணப்பட்டது. இங்கு மழைவீழ்ச்சி மிகக் குறைவாகக் காணப்படுகின்றது. மக்கள் செறிந்து காணப்பட்டார்கள். அரேபியரினால் அறிமுகப்படுத்தப்பட்ட கழுதைகள், சிறிய குதிரைகள் (Pnoiens) மேலும் மக்களின் ஆடு.மாடு கால்நடைகள் பல காணப்பட்டது. நீருக்காக யாழ் சங்கிலி மன்னனினால் தட்டையான வடிவமைப்பை கொண்ட ( Flat Terrace) தீவில் 5க்கும் மேற்பட்ட ஆழமற்ற குளங்கள் தோண்டப்பட்டன. இதனால் மக்கள் குளிப்பதற்கு, ஆடைகள் துவைப்பது, தமது நாளாந்த பாவனைக்கும், கால்நடைகளின் தாகங்களைத் தீர்ப்பதற்கும் உதவியாக இருந்தன.
மாந்தையில் துறைமுகம் அமைக்கப்பட்ட தன் பின் மக்கள் அயல் கிராமங்களிலிருந்து மன்னார் தீவை நோக்கி குடியேறினர். மன்னார் தீவு கடல் மட்டத்திலிருந்து 3மீற்றர் ஆழத்தில் காணப்பட்டதால் தமது இல்லிடங்களை அமைப்பதற்காக ஜனசஞ்சாரமற்ற ஏனைய இடங்களில் மண்ணை வெட்டி தமது வசிப்பிடத்தை உயர்த்தினர்.
இப்படியாக 60க்கு மேற்பட்ட சிறு, சிறு பள்ளக்காணிகள் மழை காலங்களில் குளங்களாக மாறின. 1940ம் ஆண்டில் மன்னார் தீவில் 80க்கும் மேற்பட்ட குளங்கள் இருந்தாக சான்றுகள் உள்ளன. 1980ம் ஆண்டில் 45க்கும் மேற்பட்ட சிறு குளங்கள் அடாத்தாக பிடிக்கப்பட்டு பெரும் நிலப்பரப்பிலிருந்து மண்களால் நிரப்பப்பட்டு வீடு நிர்மாணிக்கப்பட்டதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. அக்காலத்தில் இவ்வாறு காணப்பட்ட குளங்கள் எந்த திணைக்களங்களுக்கு பொறுப்பாக உள்ளதென எவரும் தீர்மானித்திருக்கவில்லை.

*(மிகுதி நாளை)*

# நாடு முழுவதும் இராணுவ மயம்

## பாலித ரங்கே பண்டார சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜூலை 1**

**புதிய அரசாங்கம் பதவியேற்று சுமார் ஏழு மாதங்கள் கடந்திருக்கின்றன. எனினும் முழு நாட்டையும் இரா ணுவமயமாக்கியதைத் தவிர அரசாங்கம் வேறெதை யும் செய்யவில்லை.**

இறுதியாகத் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கும், பொருளாதாரத்தைச் சீரமைப்பதற்கும் இராணுவ அதிகா ரிகளை நியமிப்பது மாத்திரமே எஞ் சியிருக்கிறது.

இந்த நிலை தொடருமாக இருந்தால் அரச நிர்வாக சேவைப் பரீட்சை எழு தித் தேர்ச்சி பெற்றவர்களுக்கு உரிய அங்கீகாரம் இல்லாமல்போய்விடும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைக் காரியாலயமான சிறிகொத்தாவில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவி யலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்ததாவது;

நவீன யுகத்திற்கு ஏற்றவாறு தனது திறன்களால் நாட்டை நிர்வகிக்கக் கூடிய ஒரு தலைவர்தான் எமது தேவையேயன்றி, வெறும் வாய் வார்த்தை வீரத்தால் பயனில்லை.

தற்போது தேர்தலைப் பொறுத்த வரை தேர்தல்கள் ஆணைக்குழு ஆளுந்தரப்புக்கும், எதிர்த்தரப்புக் கும், பொதுவாக ஒரேவிதமாகச் செயற்பட்டுவருகின்றது. நாங்கள் கொண்டுவந்த அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் ஊடாகவே இவ் வாறு தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனமானச் செயலாற்றக்கூடிய நிலை ஏற்பட்டது.

எனவே உரிய சட்டதிட்டங்களைப் புறக்கணித்து தன்னிச்சையாக செயற்படுபவர்களை விடுத்து, சர்வ தேச நாடுகளுடன் ஒன்றிணைந்து ஜனநாயக ரீதியாகச் செயலாற்றத் தக்க தரப்பினரையே இம்முறை தேர்தலில் மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்- என்றார். (ப)

# கஞ்சிபான இம்ரானை போட்டுத்தள்ள திட்டம்!

*12 துப்பாக்கிகளை மீட்டு திட்டத்தை முறியடித்தது விசேட அதிரடிப்படை*

கொழும்பு, ஜூலை 1

சிறைச்சாலை பஸ் மீது தாக்குதல் நடத்தி கஞ்சிபான இம்ரானை படு கொலைசெய்யும் நோக்கிலேயே துப்பாக்கிகள் மறைத்துவைக்கப்பட்டி ருந்தன என்று பாதுகாப்பு தரப்புக்கு தகவல் கிடைத்துள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

கொஸ்கொட தாரக தலைமையி லான குழுவினருக்கும், கஞ்சிப்பான இம்ரான் தரப்புக்குமிடையில் போதைப்பொருள் கடத்தல் தொடர் பில் ஏற்பட்டுவரும் மோதல்கள் கார ணமாகவே இந்த கொலைத்திட்டம் தீட்டப்பட்டுள்ளது எனக் கூறப்படு கின்றது. பாதாள குழுவொன்றிடமி ருந்து விசேட அதிரடிப்படையினரால் நேற்றுமுன்தினம் 12 துப்பாக்கிகள் மீட்கப்பட்டன. இலங்கையில் பாதாள குழுவொன்றிடமிருந்து ஒரு தடவை யில் அதிகளவு துப்பாக்கிகள் கைப்பற் றப்பட்ட முதல் சம்பவம் இதுவாகும் என பாதுகாப்பு தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறைச்சாலையில் அடைக்கப்பட் டுள்ள போதைப்பொருள் கடத்தல் காரரான நிழல் உலக தாதா 'ககன', கொஸ்கொட தாரக ஆகியோர் தலை மையில் இயங்கிய குழுவிடம் இருந்தே ரி 56 ரக துப்பாக்கிகள் மீட்கப்பட்டன. பொலிஸ் விசேட அதி ரடிப்படையினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலொன்றினை யடுத்து ஹோமாகம, பிட்டிபன பகு தியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை விசேட சுற்றிவளைப்பு தேடுதல் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது நான்கு மாடி வர்த்தக கட்டடத் தொகுதியொன்றில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரி 56 ரகத்தை சேர்ந்த 12 துப்பாக்கிகள் மீட்கப்பட்டன. அத்துடன், வர்த்தக நிலைய உரிமை யாளரும், பொட்ட கபில என்ற பாதாளக் குழு உறுப்பினர் என சந் தேகிக்கப்படும் ஒருவரும் கைதுசெய் யப்பட்டு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். சம்பவம் தொடர் பில் பொலிஸ் விசேட அதிரடிப்படை யினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-44)

# ஒருமுறை மட்டும் பயன்படும் பொலித்தீனை தடைசெய்க!

## சுற்றுச்சூழலுக்கான கேந்திர மையம் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 1

ஒருமுறை மாத்திரம் பயன்படுத்தக்கூடிய பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருள்க ளைத் தடை செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என சுற்றுச்சூழலுக்கான கேந்திர மையம் தெரிவித்துள்ளது.

அண்மையில் கல்கிஸ்ஸை கடற்கரை நிரப் பப்பட்டுள்ளமை தொடர்பில் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கிலும் குறித்த கோரிக்கை உள்ளடக்கப்பட்டுள்ளது என்று அதன் நிறைவேற்று பணிப்பாளர் ஹேமந்த விதானகே தெரிவித்துள்ளார்.

கடலில் பிளாஸ்டிக் பொருள்களைக் கொட் டும் நாடுகளின் பட்டியலில் இலங்கை 5 ஆவது இடத்தில் உள்ளது என்று உலக வங்கியால் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி1)

# மலேசியாவிலிருந்து 150 பேர் தாயகம் திரும்பினர்

கொழும்பு, ஜூலை 1

கொரோனாத் தொற்றை அடுத்து, இலங்கை வர முடியாது மலேசியாவில் சிக்கியிருந்த இலங்கையர்கள் 150 பேர் இன்று காலை நாட்டை வந்தடைந் தனர்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் யு.எல் 319 எனும் விசேட விமானம் மூலம், மலேசியாவின் கோலாலம்பூர் நகரிலி ருந்து. இவ்விமானப் பயணிகள் நேற்று காலை 8.52 மணிக்கு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்த டைந்துள்ளனர்.

இவர்களில் வேலைவாய்ப்புக்காக புறப் பட்டுச் சென்றிருந்த ஒரு குழுவினரும், உயர் கல்விக்காக புறப்பட்டுச் சென்றி ருந்த மாணவர்களும் உள்ளடங்குகின் றனர். இவர்கள் அனைவரும் பி.சி. ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட் டுள்ளனர். (எ-ரி1)

# தொழில் வாய்ப்பை இழந்த 20,000 பேர்!

கொழும்பு, ஜூலை 1

கொரோனா வைரஸ் காரணமாக மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரி யும் சுமார் 20 ஆயிரம் இலங்கை யர்கள் தமது தொழில் வாய்ப்பு களை இழந்துள்ளனர் என்றும், அவர்கள் பெரும் நெருக்கடிக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள் ளது.

நெருக்கடிகளுக்கு முகம் கொடுத் துள்ள இலங்கையர்கள் அந்தந்த நாட்டிலுள்ள இலங்கை தூதரகங்க ளுடன் தொடர்பு கொண்டு முறைப் பாடுகளை முன்வைக்குமாறு பணி யகத்தின் மேலதிக பொது முகாமை யாளர் மங்கள ரன்தெனிய தெரி வித்துள்ளார்.

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக தற்போது பெருமளவி லான நிறுவனங்கள் மத்திய கிழக்கு நாடுகளில் மூடப்பட்டுள்ள நிலை யில் இலங்கை பணியாளர்கள் தமது சம்பளத்தைப் பெறமுடியாத நிலையில் உள்ளனர்.

சில நிறுவனங்கள் சம்பளத்தில் ஒரு பகுதியையே வழங்கி வருகின் றன. பெருமளவிலானவர்கள் மேலதிக நேர வேலைகளை இழந் துள்ளனர் என்றும் அவர் தெரிவித் துள்ளார். (எ-ரி2)

# விகாராபதி மீது தாக்குதல் சந்தேகநபர்கள் கைது

அநுராதபுரம், ஜூலை 1

அநுராதபுரம் - கஹட்டகஸ்திகிலிய, வஹாக ஹாபுவெவ பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றின் விகாராதிபதியை பொல்லுகளால் தாக்கி, காயங்களை ஏற்படுத்தி மரத்தில் கட்டி வைத்த சம்பவம் தொடர்பாக இராணுவச் சிப் பாய் ஒருவரின் உறவினர்களைப் பொலிஸார் கைது செய்தனர்.


கஹட்டகஸ்திகிலிய பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து மூன்று சந்தேக நபர் களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தனிப்பட்ட பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு பிக்கு மீது தாக்குதல் நடத்தப்பட்டுள் ளது என்று விசாரணைகளில் தெரியவந்துள் ளது. தாக்குதலில் காயமடைந்த எப்பாவல ரதனசிறி தேரரை பிரதேசவாசிகள் இணைந்து 1990 நோயாளர்காவு வண்டி மூலம் மருத்து வமனைக்கு அனுப்பி வைத்தனர். அவர் அநு ராதபுரம் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகிறார்.

வஹாகஹாபுவெவ, கஹட்டகஸ்திகிலிய, திருகோணமலை வீதியைச் சேர்ந்த 62, 34 மற்றும் 32 வயதான சந்தேகநபர்களே சம் பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்டுள்ள னர்.

தாக்குதலுக்கு இலக்கான தேரர், இராணுவத் தில் பணிப்புரியும் தமது உறவினரின் மனை விக்கு அவ்வப்போது தொந்தரவு கொடுத்து வந்துள்ளார். தமது கௌரவத்தைப் பாதுகாத் துக் கொண்டு விகாரையில் இருக்குமாறு தேர ருக்கு பல முறை ஆலோசனை வழங்கிய போதிலும் அவர் எல்லை மீறியதால், அவரை தாக்கினோம் என சந்தேகநபர்கள் பொலிஸா ரிடம் தெரிவித்துள்ளனர். (க)

# 10 கடற்படையினர் குணமடைவு!



கொழும்பு, ஜூலை 1

கொரோனாத் தொற்றுக்குள்ளாகியிருந்த மேலும் 10 கடற்படை யினர் குணமடைந்துள்ளனர். நாட்டில் கொரோனாத் தொற்றுக் குள்ளாகி குணமடைந்த கடற்படையினரின் மொத்த எண்ணிக்கை 836 ஆக அதிகரித்துள்ளது என்று கடற்படை பேச்சாளர் தெரி வித்துள்ளார். இதுவரை, கொரோனாத் தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 42 ஆக அதிகரித்துள்ளது. இந்த நிலையில், கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 678 ஆக அதிகரித்துள்ளதுடன், தற்போது அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்று நோயாளிகளில் 353 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் தங்கிச் சிகிச்சைபெற்று வருகின்றனர். 40 பேர் கொரோனாத் தொற்று சந்தேகத்தில் வைத்தியக் கண் காணிப்பில் உள்ளனர். இலங்கையில் இதுவரை கொரோனா தொற்றுக்குள்ளாகி 11 பேர் உயிரிழந்துள்ளனர். (எ-ரி2)

# கொரோனா சோதனைக் கருவிகள் பாடசாலைகளுக்கு கிடைக்கவில்லை

## பெரும் குழப்பத்தில் அதிபர்கள்

தென்மராட்சி, ஜூலை 1

**கொரோனாவால் மூடப்பட்டுள்ள பாடசாலைகள் எதிர்வரும் 6ஆம் திகதி மீள ஆரம்பிக்கவுள்ள நிலையில் மாணவர்கள், ஆசிரியர்களை சோதனையிடும் கருவிகள் இன்னமும் கிடைக்கவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

மாணவர், ஆசிரியர்களின் பரிசோதனைக்காக கிடைக்கவேண்டிய முதலுதவிப் பெட்டி அதற்குரிய மருந்துவகைகள், நோயாளர்படுக்கை, வெப்பமானி போன்ற கருவிகள், மற்றும் பொருள்கள் இன்னமும் வந்து சேரவில்லை. இதனால் பிரதேசத்தில் வதியும் நன்கொடையாளர்கள் தமது பிரிவில் உள்ள பாடசாலைகளுக்கு இவற்றினை வழங்கி உதவ வேண்டுமென பெற்றோர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இது தொடர்பாக பாடசாலைகளின் அதிபர்களிடம் கேட்டபோது;

குறித்த பொருள்கள் பாடசாலையில் இருக்கும் பட்சத்திலேயே பாடசாலைகளில் மாணவர்களை அனுமதிக்க வேண்டுமெனச் சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தி வருகின்றனர். அடுத்த வாரம் பாடசாலைகளுக்கு மாணவர்கள் வரும்போது இப்பொருள்கள் தேவையென பெற்றோரிடம் தெரிவித்திருந்தோம் என்றனர்.

பாடசாலைகள் ஆரம்பிக்கும் போது காலையில் பாடசாலைக்கு வரும் அனைத்து மாணவர்கள், ஆசிரியர்கள் கொவிட் 19 பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னரே வகுப்பறைக்குச் செல்ல அனுமதிக்க வேண்டுமென கல்வி அமைச்சு அறிவித்ததுடன் இதற்கான பொருள்கள் விரைவில் பாடசாலைக்ளுக்கு வழங்கப்படுமெனவும் தெரிவித்தது. (ஐ-9)

# போதைப்பொருள் கடத்த சவாரிக் குதிரை திருட்டு

## மூன்று பேர் கைதாகி பிணை

கொழும்பு, ஜூலை 1

கொழும்பு - காலிமுகத் திடலில், பணம் அறவிட்டு சவாரி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட போனி குதிரை ஒன்று, போதைப்பொருள் பெற்றுக் கொள்வதற்காக திருடப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ள சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கொம்பனித் தெரு பொலிஸாரால் மூவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு கோட்டை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, திருடப்பட்ட குறித்த போனி குதிரை வத்தளை - போபிட்டிய பகுதியில் வீடு ஒன்றில் உணவு, நீர் வழங்காது மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டு, நீதிமன்ற அனுமதியுடன் பிணையம் ஒன்றின் அடிப்படையில் உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில், கொவிட் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஊரடங்கு நிலைமை அமுல்செய்யப்பட்ட இறுதி நாள்களில், குறித்த போனி குதிரை இவ்வாறு திருடப்பட்டுள்ளது. சவாரிக்கு பின்னர் குறித்த குதிரை பராமரிப்புக்காக கட்டப்படும் இடத்திலிருந்தே அது திருடப்பட்டுள்ளது. இதனையடுத்து அதன் உரிமையாளர் கொம்பனி வீதி பொலிஸில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய, கொம்பனி வீதி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் நாலக உள்ளிட்ட குழு அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்தது. இதன்போது முதலில் ஒரு சந்தேக நபரைக் கைது செய்த பொலிஸார், போதைப் பொருளுக்கு அடிமையான அந்த நபரிடம் விசாரணைகளை நடத்தியுள்ளனர். உணவு, குடிதண்ணீர் இன்றி மறைத்துவைக்கப்பட்டிருந்த குறித்த போனி குதிரை மீட்கப்பட்டது. அதன் பின்னர் முன்னெடுத்த மேலதிக விசாரணைகளில் ஏனைய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். (ஐ)



மகளிர், சிறுவர் விவகார மற்றும் சமூகப் பாதுகாப்பு அமைச்சின், முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட, பாலம்பிட்டி பாரதியார் முதியோர் பகல் நேர நிலையம், மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸால் கடந்த வெள்ளிக்கிழமை வைபவ ரீதியாகத் திறக்கப்பட்டது. (க-56)

# கலாபூஷணம் விருதுக்கு விண்ணப்பங்கள் கோரல்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வருடாந்தம் 60 வயதுக்கு மேற்பட்ட கலைஞர்களுக்கு வழங்கப்படும் கலாபூஷணம் விருதுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அதற்கமைவாக தென்மராட்சி பிரதேச கலைஞர்களிடமிருந்து பிரதேச இந்து சமய கலாசார அலகினரால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்பும் பிரதேச கலைஞர்கள் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் உரிய படிவத்தைப் பெற்று எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் கையளிக்குமாறு பிரதேச செயலர் திருமதி உ.சிவலிங்கம் அறிவித்துள்ளார். (க-9)

# இறுதிவரை சம்பளம் பெற்றுவிட்டு தனித்துச் செயற்படுகிறார் அனுசா

## ம.ம.மு தலைவர் இராதாகிருஷ்ணன் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 1

எனது அமைச்சு மூலம் இறுதிவரை சம்பளம் பெற்றார் அனுசா. அவ்வாறு சம்பளம் பெற்றுவிட்டே இன்று தனித்துச் செயற்படுகின்றார் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளருமான முன்னாள் அமைச்சர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

பொதுத்தேர்தலின் பின்னர் மலையகமக்கள்முன்னணியைக் கைப்பற்றப்போவதாக அனுசா சந்திரசேகரன் விடுத்துள்ள அறிவிப்புக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

அனுசா அமேஷ்வரன் என்பவர் எமது கட்சியில் இருந்து வெளியேறும்வரை அமைச்சு ஊடாகச் சம்பளம் வாங்கினார். இப்போது தனித்துச்சென்று வாக்குக் கேட்கின்றார். அதுமட்டுமல்ல பொதுத் தேர்தலின் பின்னர் மலையக மக்கள் முன்னணியை மீட்கப் போவதாகவும் கூளுரைத்துள்ளனர். தேர்தல் முடியட்டும், அதனைப் பார்த்துக்கொள்வோம். மலையக மக்கள் முன்னணியை நான் பொறுப்பேற்கும் போது அனுசா மாணவியாக இருந்தார். கட்சி முக்கியமெனில் அதனை வைத்திருக்கலாம் தானே? மலையக மக்கள் முன்னணி இன்று இருக்கின்றதெனில் கட்சி ஆதரவாளர்களே அதற்கு பிரதான காரணம். தலைமைத்துவம் வழங்கவே என்னை அழைத்து வந்தனர். சந்திரசேகரனின் கொள்கைகள் சிறந்தவை. நல்லது செய்யவேண்டும் என்பதற்காகவே நானும் வந்தேன். நான் எங்கிருந்தாலும் தலைவர்தான். அந்தக் கட்சியில் இருந்திருந்தாலும் தலைவராகவே இருந்திருப்பேன். மலையக மக்கள் முன்னணியை பலப்படுத்த முயற்சிக்கும் வேளை முட்டுக்கட்டைகள் வருகின்றன. அவற்றைக் கண்டுகொள்ள வேண்டாம். தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்வது குறித்து நாம் கவனம் செலுத்துவோம் - என்றார். (ப)

# கொரோனாச் சோதனை என்ற பெயரில் மக்களை அச்சுறுத்துகிறது இராணுவம்

## முன்னாள் எம்.பி. சிவமோகன் குற்றச்சாட்டு

மன்னார், ஜூலை 1

கொரோனாவைக் காரணம் காட்டி வடக்கில் முன்னரை விட அதிகமான சோதனைச் சாவடிகளை அமைத்து சோதனை என்னும் பெயரில் ஆயுதம் தரித்தவர்கள் மக்களை அச்சுறுத்தி வருகின்றார்கள். இதன் காரணமாக மக்களால் சுதந்திரமாக வாக்களிக்க முடியாத சூழல் உருவாக்கப்பட்டுள்ளது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொரோனா வைரஸ் பிரச்சினை நாடு முழுவதும் உள்ளது. ஆனால் பாதுகாப்புக் கெடுபிடி வடபகுதிக்கு மட்டும் ஏன்? தமிழர் பிரதேசங்களில் உள்ள பாதுகாப்புக் கெடுபிடிகள் மதவாச்சியைக் கடந்தால் இல்லை ஆனால் அதிகமான கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டது தென்னிலங்கைப்பகுதியில். உண்மையில் இந்தப் பாதுகாப்பு இறுக்கமான நடைமுறை இருக்க வேண்டியது தென்னிலங்கையிலேயே. அப்படி இருக்கையில் இந்த விடயத்தில் தமிழர் பிரதேசங்களுக்கு மாத்திரம் பாரபட்சம் காட்டப்படுவது ஆரோக்கியமான விடயம் அல்ல. எதிர்வரும் ஓகஸ்ட் 5ஆம் திகதி நடைபெற இருக்கும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் நீதியாகவும் சுதந்திரமாகவும் நடைபெறுவதற்குத் தடையாக இந்தப் பாதுகாப்புப் படையினரே இருக்கப் போகின்றார்கள் - என்றார். (ப-213)

# நான்கு பொலிஸார் பணி இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூலை 1

போதைப்பொருள் கடத்தல்காரர்களுடன் தொடர்பில் இருந்து, கைப்பற்றப்பட்ட போதைப் பொருள்களில் ஒரு பகுதியை கடத்தல்காரர்களுக்கே மீள விற்பனை செய்தனர் எனக் கூறப்பட்ட விடயத்தில் பி.என்.பீ எனப்படும் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் 4 அதிகாரிகள் சி.ஐ.டி யால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்கள் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

உப பொலிஸ் பரிசோதகர், கான்ஸ்டபிள் உட்பட நால்வர் இவ்வாறு பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் சி.ஐ.டி. சிறப்பு விசாரணைகளை முன்னெடுக்கும் நிலையில், பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் பணிப்பாளரினால் இந்த நால்வரும் பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர் என்று அவர் சுட்டிக்காட்டினார். (ஐ)

# கொரோனாவால் பீஜிங் முடக்கம்

## வலுவடைகிறது இரண்டாவது அலை

**பீஜிங், ஜூலை 1**

**கொரோனா வைரஸ் சீனாவில் மீண்டும் தலையெடுக்கத் தொடங்கியுள்ளது. தலைநகர் பீஜிங்கில் கொரோனா தீவிரமாகப் பரவத் தொடங்கியதை அடுத்து அங்கு ஊரடங்கு உத்தரவு பரவலாகப் பிறப்பிக்கப்பட்டுள்ளது.**

உலகம் முழுவதையும் இன்று அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ், சீனாவின் ஹுபெய் மாகாணத்தில் உள்ள வுஹான் நகரில்தான் முதன் முதலாகப் பரவியது. கடுமையான ஊரடங்கு உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டதன் விளைவாக, சீனாவில் இந்த நோய்த்தொற்று கடந்த ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் முழுவதுமாக கட்டுக்குள் வந்தது.

இந்த நிலையில், சீனத் தலைநகர் பீஜிங் அருகே உள்ள அக்சின் என்ற பகுதியில் கடந்த சில நாள்களாக கொரோனா வைரஸ் மீண்டும் பரவத் தொடங்கியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அங்குள்ள ஓர் இறைச்சிச் சந்தையில் பணிபுரிவோரிடம் இருந்து இந்த வைரஸ் பரவியிருக்கக் கூடும் என சந்தேகிக்கப்படுகிறது.



முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பீஜிங் முழுவதும் முழு ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அங்குள்ள பள்ளி, கல்லூரிகள், தொழில் நிறுவனங்கள், வணிக வளாகங்கள், கடைகள், திரையரங்குகள் மூடப்பட்டுள்ளன. ஒரு வீட்டில் இருந்து நாளொன்றுக்கு ஒருவர், ஒருமுறை மட்டுமே வெளியே வரலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)



## சீனாவில் பன்றிகளிடையே வைரஸ்; எந்நேரமும் மனிதருக்குப் பரவலாம்!

பீஜிங், ஜூலை 1

சீனாவில் பன்றிகளிடையே புதியதொரு வைரஸ் பரவி வருகின்றது. இந்த வைரஸ் எந்நேரமும் மனிதர்களிடையே பரவலாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

சீனாதான் கொரோனாப் பெருந்தொற்றின் பிறப்பிடம். பன்றியில் இருந்து கொரோனா வந்தது, வௌவாலில் இருந்து கொரோனா வந்தது, பாம்பில் இருந்துதான் அது பரவியது என்று பல்வேறு காரணங்கள் சொல்லப்படுகின்ற போதிலும் கொரோனாப் பெருந்தொற்றுக்கான உண்மைக்காரணம் என்னவென்று இன்னும் அறியப்படவில்லை. இந்த நிலையில் பன்றிகளிடையே புதியதொரு வைரஸ் காய்ச்சல் பரவுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வுகானில் இருந்து சில கிலோமீற்றர் தொலைவில் உள்ள பகுதிகளில் வசிக்கும் பன்றிகளில்கூட இந்த வைரஸ் அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த வைரஸ் எந்நேரமும் மனிதர்களைத் தாக்கலாம் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதனால் மிகமிகத் துரிதமாக சீனாவில் உள்ள பன்றிகளுக்குச் சோதனை நடத்தப்பட்டு வருகின்றது. மேலதிக பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம)

## நிலுவைப்பணம் கேட்டவர்களை துப்பாக்கியால் சுட்ட முதலாளி!

### சிம்பாப்வேயில் அட்டூழியம்

ஹராரே, ஜூலை 1

நிலுவைப்பணம் கேட்டவர்களை சீன முதலாளியொருவர் துப்பாக்கியால் சுட்ட சம்பவம் சிம்பாப்வேயில் இடம்பெற்றுள்ளது.

சிம்பாப்வே உட்பட ஆபிரிக்காவில் கனிம வளங்கள் மற்றும் நிலக்கரி சுரங்க தொழிலில் சீன முதலாளிகள் பலர் ஏகப்பட்ட தொகையினை முதலீடு செய்து நடத்தி வருகின்றனர், ஆனால் தொழிலாளர்களுக்கு எந்தவித பாதுகாப்பும் கிடையாது. சுகாதார, சுற்றுச்சூழல் மனித உரிமை மீறல்களில் சீன முதலாளிகள் ஈடுபட்டு வருகின்றனர் என்று சிம்பாப்வே சுற்றுச்சூழல் சட்ட அமைப்பு தெரிவித்துள்ளது.

மேலும் குறைந்த சம்பளத்தில் கடுமையான பணியில் அவர்களை எந்தவிதப் பாதுகாப்பு உத்தரவாதமும் இல்லாமல் ஈடுபடுத்துவதாக மனித உரிமைகள் அமைப்புகள் ஏற்கெனவே பலமுறை கூறிவந்தன.

இந்த நிலையில் தொழிலாளர்களை சீன முதலாளி துப்பாக்கியால் சுட்ட சம்பவம் பரபரப்பாகியுள்ளது.

க்வேரு மாகாணத்தில் சுரங்க முதலாளி சாங் சுவென் நிலுவைக் கூலியைக் கேட்ட தொழிலாளி ஒருவரை இடது தொடையில் 3 முறையும், வலது தொடையில் 2 முறையும் சுட்டுள்ளார். இன்னொரு தொழி லாளி மீதும் தோட்டா பாய்ந்தது. இவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். சாங் மீது கொலை முயற்சி வழக்குத் தொடரப்பட்டுள்ளது. ஞாயிறன்று நடந்த இந்தச் சம்பவத்தினால் சீனாவுடன் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியான உறவுகள் குறித்து மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை சிம்பாபவேயில் எழுந்துள்ளதாக அந்த நாட்டின் ஊடகங்கள் வலியுறுத்தியுள்ளன. (ம)



## பங்களாதேஷில் படகு விபத்து: இறப்பு எண்ணிக்கை 30ஆக அதிகரித்தது

டாக்கா, ஜூலை 1

பங்களாதேஷில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற படகு விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 30ஆக அதிகரித்தது.

பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றது. இரு படகுகள் ஒன்றுடன் ஒன்று மோதி இந்த விபத்து இடம்பெற்றது. ஒரு படகு தலைகீழாகக் கவிழ்ந்தது. 23 பேரின் சடலங்கள் உடனடியாக மீட்கப்பட்ட நிலையில் காணாமற் போன பலர் தேடப்பட்டனர். அவர்களில் மேலும் 7 பேர் சடலங்களாக மீட்கப்பட்டமையை அடுத்து உயிரிழப்பு எண்ணிக்கை 30ஆக அதிகரித்தது. (ம)





## கராச்சியில் குண்டுவெடிப்பு 10 பேர் உயிரிழந்தனர்

இஸ்லாமபாத், ஜூலை 1

பாகிஸ்தானின் கராச்சியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர் எண்ணிக்கை 10ஆக அதிகரித்தது.

கராச்சிப் பங்குச்சந்தை கட்டடப் பகுதியில் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. பங்குச்சந்தை அலுவலகத்தின் பிரதான வாயிலில் கையெறி குண்டை வீசிவிட்டு தாக்குதல்தாரிகள் நுழைந்தனர் என்றும் அவர்கள் மேற்கொண்ட தாக்குதலில் நால்வர் உயிரிழந்தனர் என்றும் முதல் கட்டமாகத் தெரிவிக்கப்பட்ட நிலையில் உயிரிழப்பு எண்ணிக்கை 10ஆக தற்போது அதிகரித்துள்ளது. (ம)

## ட்ரம்பை கைதுசெய்ய ஈரான் அரசு உத்தரவு

தெஹ்ரான், ஜூலை 1

ஈரான் தளபதி காசிம் சுலைமானியைக் கொன்றமைக்காக அமெரிக்க அதிபர் ட்ரம்பைக் கைது செய்ய உத்தரவிட்டுள்ளது ஈரான்.

ஈரானின் முதன்மை ராணுவத் தளபதி காசிம் சுலைமானி கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கையில் கொல்லப்பட்டார். ஜனவரி 3ஆம் திகதி இடம்பெற்ற



இந்தத் தாக்குதலுக்குக் காரணமானவர்கள் என்று அமெரிக்க அதிகாரிகள் 30 பேரின் பெயரை ஈரான் பட்டியலிட்டது. இந்தப் பட்டியலில் முக்கிய குற்றவாளியாக ட்ரம்ப் பெயரிடப்பட்டுள்ளார். இதையடுத்தே அவரைக் கைது செய்ய ஈரானால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம)

# கல்முனை மாநகர எல்லைக்குள் அத்துமீறியது களுவாஞ்சிக்குடி

## தடுத்து நிறுத்த வேண்டும் என்கிறார் குபேரன்

கல்முனை, ஜூலை 1

கல்முனை மாநகர சபையின் வடக்கு எல்லைக்குள் களுவாஞ்சிக்குடி பிரதேச சபை முன்னெடுத்து வருகின்ற அத்துமீறல் செயற்பாடுகளை தடுத்து நிறுத்துவதற்கு அவசர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கல்முனை மாநகர சபையின் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் எஸ். குபேரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

சில தினங்களுக்கு முன்னர் களுவாஞ்சிக்குடிப் பிரதேச செயலகம், எமது மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட கோவில் வீதியைச் சீரமைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தது. எனினும் முன்னாள் எம்.பி.கோடீஸ்வரன், அம்பாறை மாவட்டச் செயலரைத் தொடர்பு கொண்டு, நிலைமையை எடுத்துக் கூறியதையடுத்து அந்த ஏற்பாடு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு களுவாஞ்சிக்குடி பிரதேச சபையும் செயலகமும் எமது மாநகர சபை எல்லைக்குள் அடிக்கடி அத்துமீறும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன. இவற்றைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது. இதனால் அப்பகுதிகளில் மக்களிடையே முறுகல் நிலை ஏற்படுகிறது. எனவே இந்த எல்லைப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளை எமது மாநகர மேயர் விரைவுபடுத்த வேண்டும் என்றார்.

இதற்கு பதிலளித்த மாநகர மேயர் ஏ.எம்.றகீப்;

இந்த எல்லைப் பிணக்குச் சம்பந்தமாக சில வாரங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு மாவட்டச் செயலரைச் சந்தித்து, தெளிவுபடுத்தியிருந்தோம். அவர் இப்பிரச்சினையில் தலையிட்டு நியாயமான தீர்வைப் பெற்றுத் தருவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார். எமது பக்க நியாயங்களுக்குரிய ஆவணங்களையும் கோரியுள்ளார். அவ்வாறே அம்பாறை மாவட்டச் செயலரைச் சந்திப்பது தொடர்பாக அவருடன் பேசியிருந்தேன். தற்போது பொதுத் தேர்தல் காலமாக இருப்பதனால் ஓகஸ்ட் 5ஆம் திகதிக்குப் பின்னர் சந்திப்பதற்கு அவர் இணக்கம் தெரிவித்துள்ளார். அதனைத் தொடர்ந்து ஏனைய நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் - என்றார். (ப)

# தேர்தல் வெற்றிக்காக இனவாத தீயைப் பரப்பும் பேரினவாதிகள்

## சட்டத்தரணி தேவராஜா காட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

தேர்தல் வெற்றிக்காக இனவாதத் தீயைப் பரப்பும் பேரினவாதச் சக்திகளும் குறுகலான சிந்தனையுடைய தமிழ்த் தேசியவாதிகளும் மீண்டும் இந்த நாட்டை ஒரு போருக்குள் தள்ளவே முயல்கிறார்கள். இவ்விரண்டு தரப்புகளையும் உழைக்கும் மக்கள் நிராகரிக்க வேண்டும் என மக்கள் மேம்பாட்டு ஐக்கிய முன்னணியின் பேச்சாளரும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான சோ. தேவராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் பேரினவாதிகளால் கடந்த காலங்களில் உருவாக்கப்பட்ட தமிழ் மக்கள் தொடர்பான பயத்தைப் போக்க வேண்டுமென்றால், இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் யாழ், கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் சுயேச்சைக் குழு 2 இல் பட்டச் சின்னத்தில் போட்டியிடும் மக்கள் சார்பான முற்போக்காளர்கள் நாடாளுமன்றத்திற்குத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக அனுப்பப்பட வேண்டும். தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையைத் தொடர்ந்து வலியுறுத்தி வரும் நாம், இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்கு சுயாட்சி அலகுகள் மூலமான தீர்வையே முன்வைத்து வருகின்றோம். கடந்த காலங்களில் அரசாங்கத்தைப் பாதுகாக்க வரிந்துகட்டி நின்ற தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினர், பிரிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைக்க ஒரு தனிநபர் பிரேரணையைக்கூடக் கொண்டுவர முயலாமை அவர்களின் கையாலாகாத் தனத்தை வெளிப்படுத்தியது. ஆனால், எமது பிரதிநிதிகள் இத்தகைய சொல் ஒன்று செயல் இன்னொன்று என்ற வரலாற்றில் வந்தவர்கள் அல்லர். அவர்கள் உரிமைகளுக்கான மக்களின் போராட்டங்களை வழிநடத்தி, முன்னணியில் நின்று உண்மையாகப் போராடி, பல வெற்றிகளையும் பெற்றுக்கொடுத்த உறுதியான உழைக்கும் மக்களின் பிரதிநிதிகள். அவர்களை இம்முறை நாடாளுமன்றம் அனுப்ப அனைவரும் உறுதிபூணவேண்டும் - என்றார். (ப)

# மட்டக்களப்பில் 4 ஆசனங்களை தமிழ்க் கூட்டமைப்பு கைப்பற்றும்

## அதன் வேட்பாளர் கமலதாசன் நம்பிக்கை

மட்டக்களப்பு, ஜூலை 1

**மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மக்கள் தமது அமோக ஆதரவின் மூலம் நான்கு ஆசனங்களைப் பெறக்கூடிய அங்கீகாரத்தை வழங்குவார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் சட்டத்தரணி ந.கமலதாசன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மக்கள் வழங்கும் ஆதரவின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று ஆசனங்கள் கிடைக்கக் கூடிய இயலுமை இருந்தும்கூட தற்போதைய அரசியல் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு தமிழ் மக்களின் அரசியல் பலத்தை உறுதிப்படுத்த வேண்டிய தேவையானது எமக்கும், மக்களுக்கும் இன்றியமையாதது காணப்படுகின்றது. இந்தச் சூழ்நிலையில் மக்கள் தமது அமோக ஆதரவின் மூலம் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நான்கு ஆசனங்களைப் பெறக்கூடிய அங்கீகாரத்தை வழங்குவார்கள் என்று நான் எதிர்பார்க்கின்றேன். கூட்டமைப்பானது மூன்று கட்சிகளை ஒருங்கமைத்துக் கொண்ட கட்சியாகும். இதன் தலைமைகள் எடுக்கும் தீர்மானங்கள் தொடர்பில் அனைவரும் தீர்மானத்தை நிறைவேற்றுவோம். அந்தவகையில் மஹிந்த ராஜபக்ச தலைமையிலான பொதுஜன பெரமுன கட்சி தேர்தலின் பின்னர் ஆட்சி அமைக்கக் கூடிய சூழல் இருந்தால் புதிய அரசமைப்பு விடயத்தில் எங்களது வேண்டுகோளை ஏற்றுக் கொள்வார்களாக இருந்தால் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் தெரிவாகும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானம் எடுக்கும் பட்சத்தில் அதன் முடிவை என்னால் பரிசீலிக்க முடியும் என்றார். (ப-150)

# இலக்கங்களில் தொங்காதீர்!

## வேலுகுமார் கூறுகிறார்

கண்டி, ஜூலை 1

தோட்டத் தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாகவும், சுயதொழிலாளர்களாகவும் மாற்றுவதற்கான பரந்துபட்ட எண்ணக்கருவை நிறைவேற்றிக்கொள்வதற்கு பாடுபடவேண்டிய நிலையில், அத்திட்டத்தின் பெறுமதியை, முக்கியத்துவத்தை உணராமல் சிலர் இன்னமும் இலக்கங்களில் தொங்கிக் கொண்டு மீளா வட்டத்துக்குள் முடங்கியிருப்பது ஒட்டுமொத்த சமூகத்தையே சிறுமைப்படுத்தும் செயலாகும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளருமான வேலுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நல்லாட்சியின்போது கண்டி மாவட்டம் உட்பட மலையகத்தில் ஏனைய மாவட்டங்களில் வாழும் மக்களுக்காகப் பல சேவைகளை வெறும் நான்கரை வருடங்களில் நாம் வெற்றிகரமாகச் செய்துமுடித்தோம். சலுகை அரசியல் நடத்தாமல் அபிவிருத்தி மற்றும் உரிமை அரசியலை சமாந்தரமாக முன்னெடுத்தோம். குறிப்பாக தோட்டத் தொழிலாளர்களைக் கைக்கூலி என்ற நிலையிலிருந்து விடுவித்து சிறுதோட்ட உரிமையாளர்களாக, தமிழ் விவசாயிகளாக, சுயதொழிலாளியாக மாற்றுவதற்கான ஆரம்பக்கட்ட வேலைத்திட்டத்தையும் முன்னெடுத்திருந்தோம். குறுகிய மற்றும் நீண்டகால அடிப்படையில் இதற்கான பொறிமுறை அமுல்படுத்தப்படவிருந்தது. ஆனால், ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் அத்திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. வீடமைப்புத் திட்டம் உட்பட மலையகத்துக்கான அபிவிருத்திகள் கிடப்பில் உள்ளன. இவற்றைச் செயற்படுத்துவதைவிடுத்து தமிழ் முற்போக்கு கூட்டணி என்ன செய்தது என கேள்வி எழுப்புவதும், ஆயிரம் ரூபா பற்றி மட்டும் கதைப்பதுமே அரசியலாக மாறியுள்ளது. இந்த அணுகுமுறையானது எமது சமூகத்தை நாமே சிறுமைப்படுத்தும் மட்டந்தட்டும் செயலாகும் - என்றார். (ப)

# தனி நாடு கேட்கவில்லை

## விக்கி அணியின் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூலை 1

உரிமைகளுடன் வாழ்வதற்கு நாங்கள் தனி நாடு கேட்கவில்லை. ஆயுதம் எடுத்து அரசாங்கத்துடன் சண்டை போடவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் க. அருந்தவபாலன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக பெருந்தொகையான நிதியை சர்வதேச நாடுகள் கொடுத்தது. வடக்கு மாகாணத்துக்கு வந்த பணத்தை எல்லைக் கிராமங்களுக்கு அவர்கள் கொடுத்துவிட்டார்கள். நாங்கள் எமது மக்களுக்கு உதவிகளைச் செய்ய வேண்டும். எமது மக்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்க வேண்டும். போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வு, புனருத்தாரணம் வழங்கப்பட வேண்டும். நாங்கள் இந்த நாட்டில் உரிமைகளுடன் வாழவேண்டும். உரிமைகளுடன் வாழ்வதற்கு நாங்கள் தனி நாடு கேட்கவில்லை. ஆயுதம் எடுத்து அரசாங்கத்துடன் சண்டை போடவில்லை. எங்கள் உரிமைகளுக்காக ஜனநாயக ரீதியில் போராட்டங்களை முன்னெடுப்பதுடன், நாடாளுமன்றத்தின் ஊடாக சர்வதேசத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டும். தன்னாட்சி அதிகாரம் கொண்ட சமஷ்டி அடிப்படையிலான உரிமைகளுடன் வாழ விரும்புகின்றோம். 3000 வருடங்களுக்கு முன்பிருந்தே வாழும் மூத்த குடிகள் நாங்கள். எங்களுடைய வடக்கு கிழக்குப் பகுதிகளை மரபு ரீதியில் வாழ்கின்ற பகுதிகளாக நாங்கள் கொண்டுள்ளோம். வடக்கு கிழக்குப் பகுதியில் ஓர் சுயாட்சி அமைப்பை நாங்கள் கேட்கின்றோம். எங்கள் காணிகள், வளங்களை எங்களுக்காகப் பயன்படுத்துவதையே நாங்கள் கேட்கிறோம். உரிமைக்காகக் குரல் கொடுப்போமேயன்றி வெறுமனே கோசம் போட்டுக்கொண்டு நிற்பவர்கள் நாங்கள் அல்லர் என்றார்.

இதேவேளை அண்மையில் தொல்புரம் வழக்கம்பரையில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றின் போது, தமிழ்த் தேசியக் கூட்டணியின் செயலாளர் நாயகம் சி.வி. விக்னேஸ்வரன், வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை தாம் கைவிடவில்லை என்று தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ப)

## மரண அறிவித்தல்



### சண்முகலிங்கம் பரமேஸ்வரி (நாகேஷ்)

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த சண்முகலிங்கம் பரமேஸ்வரி நேற்று (30.06.2020) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னையா இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சண்முகலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அருளானந்தம், கனகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பாக்கியம் மற்றும் விமலாதேவி ஆகியோரின் மைத்துனியும், சிவசுகிர்தமலர் (வவி), கதிரமலைநாதன் (சுவிஸ்), ஜெகநாதன் (கனடா), இரகுநாதன் (கனடா), மணிமேகலை (சுசி,கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், தியாகமூர்த்தி (ஓய்வுபெற்ற மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்), சுரேந்திரா (சுவிஸ்), நவரஞ்சிதமலர் (கனடா), சுதா (கனடா), கிருபானந்தன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், பிரணவி, கனிஷ்டா, சஹீனா, ரம்யா, லாவண்யா, காருண்யன், சஹானா, பிரவின், கிருஷ்ணா, கிருஷாந் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2020) புதன்கிழமை அன்னாரின் மகளின் திருமதி சிவசுகிர்தமலர்-தியாகமூர்த்தி, காங்கேசன்துறை வீதி, கோண்டாவில் மேற்கிலுள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மு.ப 11.00 மணிக்கு உரும்பிராய் இளங்காட்டு இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.**
**077 9452 054**

**தகவல்: தியாகமூர்த்தி**
**(ஓய்வுபெற்ற மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்)**

## மரண அறிவித்தல்

**தோற்றம்** 16 . 09 . 1950



**மறைவு** 30 . 06 . 2020

### திருமதி ஞானேந்திரன் செபமாலையம்மா

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், 4ஆம் வட்டாரம் முள்ளியவளை முல்லைத் தீவை வசிப்பிடமாகவும் தற்போது யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையில் வசித்தவரு மாகிய திருமதி ஞானேந்திரன் செபமாலையம்மா நேற்று (30.06.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானேந்திரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வர்களான ஜேம்ஸ் அன்னரெத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான சின்னத்தம்பி வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மரு மகளும், பிரபாகரன் காலஞ்சென்றவர்களான உதயதர்சினி, பிரியதர்சினி மற்றும் டினோகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சர்மிளா, வினோ (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான அன்ரனிப்பிள்ளை, ராசாத்தி மற்றும் விமலா, நிர்மலா காலஞ்சென்ற யசிந்தா ஆகியோரின் அன்பு சகோதரியும் லூர்த்தம்மா, சிந்தாத்துரை, சின்ராசா, முத்துராசா காலஞ்சென்ற அருளானந்தம் மற்றும் அருள்மணி, செல்வ ரெட்ணம், அருட்பிரகாசம், வேவி, காலஞ்சென்ற வவி ஆகியோரின் மைத்துனியும், கேனுசா, யானுசா, கேய்சாந், ஆரோன் (கனடா), கெய்டன் (கனடா) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (02.07.2020) வியாழக்கிழமை இல.15/10, ஈச்சமோட்டை கடற்கரை வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இருந்து காலை 8.00 மணியளவில் நல்லடக்கத்திற்காக முல்லைத்தீவில் உள்ள முள்ளிய வளை திரேசம்மாள் ஆலயத்தில் முற்பகல் 11.00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, முள்ளியவளை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப் படும்.

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 078 8930 -யாழ்ப்பாணம்**
**077 5199 657 -முள்ளியவளை**




## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை (வ-து). விண்ணப்பங் கோரல்

பதவி : **செயலாளர்**
சம்பளக் குறியீட்டு இலக்கம் 114-02
**சம்பளத்திட்டம் :** 24590 - 460x10 - 495x10 - 34140
(கூ.வே. ஆணைக்குழுவின் சுற்றறிக்கைக்கு அமைய ஏனைய படிகள் வழங்கப்படும்) தகைமைகள்

அ) கூட்டுறவு ஊழியர் 03வது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 03 வருடகால அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 04 வது சம்பளத்திட்ட பதவியில் ஆகக் குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டமொன்றுடன் அல்லது அதற்குச் சமனான தகைமையொன்றுடன் அங்கீகரிக்கப் பட்டவர்த்தக கைத்தொழில் / கூட்டுறவுத் துறைசார் கல்வி நிறுவனமொன்றில் முகாமை நிலையிலான பதவியில் ஆகக் குறைந்தது 10 ஆண்டு கால அனுபவம். இதில் சிரேஸ்ட முகாமை நிலைப் பதவியில் ஆகக் குறைந்தது 06 ஆண்டு கால கட்டாய அனுபவம்.

**அல்லது**

இ) கூட்டுறவு, முகாமை தொடர்பான டிப்ளோமா பயிற்சிப் பத்திரம்/ க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் / கூட்டுறவுத்துறைசார் கல்வி நிறுவனமொன்றில் ஆகக்குறைந்தது 12 ஆண்டு கால அனுபவம். இதில் சிரேஸ்ட முகாமை நிலைப் பதவியில் ஆகக் குறைந்தது 06 ஆண்டுகால கட்டாய அனுபவம்.

வயதெல்லை :- 40-50 வரை
கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதல்ல
கணினி அறிவுடையோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்
விண்ண ப்ப முடிவுத்திகதி :- 18.07.2020
விண்ணப்பிக்க வேண்டிய முகவரி :- தலைவர், யாழ் மாவட்டக் கூட்டுறவுச்சபை வீரசிங்கம் கட்டடத் தொகுதி, 2ம்மாடி, இல.12, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
விண்ணப்பப் படிவத்தை சபையின் கடமை நேரத்தில் ரூபா 20.00 செலுத்தி பெற்று விண்ணப்பிக்கவும் **(சான்றிதழ்களின் பிரதிகள் யாவும் இணைக்கப்பட வேண்டும்)**

(in.13118) (13.17)

**தலைவர், யா.மா.கூ.சபை**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் **பாலகிருஸ்ணன் ஜெயதீஸ்வரன்**

**தோற்றம்** 21.01.1954

**மறைவு** 01.06.2020

கடந்த (01.06.2020) திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு பல்வேறு வழிகளில் உதவியும் ஆறுதலும் அளித்த அனைவருக்கும், நேர்முகத்திலும் தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலமாகவும் அனுதாபங்களை தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டோருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியை தெரிவித்துக்கொள்வதுடன் இன்று (01.07.2020) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் கிரியை கள் நடைபெற உள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

**உரும்பிராய் வடக்கு,**
**உரும்பிராய்.**

(J.11094) (13.17)

**077 180 7739**
**077 362 4334**

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வராசா சறோஜினிதேவி

**தோற்றம்:18.03.1940** **மறைவு:30.06.2020**



உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராசா சறோஜினிதேவி நேற்று (30.06. 2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராசாவின் (முன்னாள் இ.போ.ச நடத்துனர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற வர்களான பொன்னம்பலம் நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், வஜனி, ஸ்ரீஸ்காந்தன் (கொழும்பு), தயாஸ்காந்தன் (இ.போ.ச. பொறியியல் பகுதி), சிவாஜினி (நிர்வாக உத்தியோகத்தர், சமூக சேவை திணைக்களம், வட மாகாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யதீஸ்வரானந்தன், ராஜமணி (கொழும்பு), தவராணி, பன்னீர்ச் செல்வன் (யாழ். மாநகரசபை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தக்சிகா (பிரான்ஸ்), தரணிகா (யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மாணவி), வேதிகா, சவீகா, வைஷ்ணவி, புருசோத், கஜானா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர் களான செல்வராசா, நாகரத்தினம், தம்பிராசா மற்றும் தேவராசா, பூமாதேவி, மகேந்திரராசா, புவனேந்திரராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2020) புதன்கிழமை மு.ப 9.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொ.இல:-076 885 6337**

**தகவல் :-**
**குடும்பத்தினர்**

# மோசடிகள் தொடர்பில் 60 முறைப்பாடுகள்

கொழும்பு, ஜூலை 1

நிதி மற்றும் லீசிங் நிறுவனங்களின் மோசடிகள் தொடர்பில் 60 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அது குறித்து ஆராயும் மூவரடங்கிய குழு தெரிவித்துள்ளது.

இதில் பெரும்பாலானவை தனிநபர் தொடர்பான முறைப்பாடுகள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

வட்டி தொடர்பிலான முறைகேடுகள், மீண்டும் கையகப்படுத்துதல், சட்டவிரோதமாக லீசிங் மற்றும் நிதி நிறுவனங்களை நடத்திச் செல்லல் தொடர்பில் அதிக முறை ப்பாடுகள் கிடைத்துள்ளன.

மூவரடங்கிய குழுவினால் முறைகேடுகளை ஏற்கும் நடவடிக்கைகள் கடந்த 23 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன.

இதன் அறிக்கை இன்று மத்திய வங்கி ஆளுநரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

நிதி மற்றும் லீசிங் நிறுவனங்களின் மோசடிகள் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக மத்திய வங்கி ஆளுநர் பேராசிரியர் லக்ஸ்மனால் மூவர் கொண்ட குழு நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்த க்கது. (ஐ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 30 . 06 . 1935

மறைவு 01 . 06 . 2020

### அமரர் தங்கம்மா சோமசுந்தரம்

உயிரோடு ஒளிவீசி மறைந்த பின்னும்
எமக்கு ஒளி தரும் எம் அன்புத் தெய்வம்.

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் மற்றும் புலம்பெயர் நாடுகளிலிருந்து தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்த உறவினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

83/16, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

(CS.22665)(13.17)

குடும்பத்தினர்

## 31 ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்



மலர்வு 14 . 08 . 1945

உதிர்வு 01 . 06 . 2020

### அமரர்
### நடராசா சிவக்கொழுந்து (தவமணி)

கடந்த (01.06.2020) அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தாயாரின் 31ஆம் நாள் நினைவு நிகழ்வு இன்று (01.07.2020) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. எமது துயரச் செய்தி அறிந்து நேரிலும் தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் கூறியவர்களுக்கும், உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

பெரியமாவடி வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.
021 227 0106

# தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டுக்களவாணிகள்!

## சொல்கிறது மஹிந்த அணி

**யாழ்ப்பாணம், ஜூலை 1**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எல்லாம் கூட்டுக் களவாணிகள். மக்கள் அவர்களுக்கு வாக்களிக்கக்கூடாது என்று மஹிந்த அணி தெரிவித்துள்ளது.**

**மஹிந்த அணியைச் சேர்ந்த அமைச்சர் விமல் வீரவன்ச, உதயகம்பன்பில ஆகியோர் கூட்டாக இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமஷ்டியின் ஊடாக தனி நாட்டை வலியுறுத்துகின்றது. தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் ஊடாக தனி நாட்டை வலியுறுத்துகின்றது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இரு தேசம் என்ற கோட்பாடு ஊடாக தனி நாட்டை வலியுறுத்துகின்றது. மூன்று கட்சிகளும் ஏதோவொரு விதத்தில் தனி நாட்டையே வலியுறுத்துகின்றன. இவர்களுக்கு மக்கள் வாக்களிக்கக் கூடாது.

தேர்தல் விஞ்ஞாபனங்கள் நாட்டின் சட்டத்துக்கு உட்பட்டே தயாரிக்கப்பட வேண்டும். அரசும், தேர்தல்கள் ஆணைக்குழுவும் இதனைக் கவனிக்க வேண்டும். நாட்டின் நல்லிணக்கத்தைச் சீர்குலைக்காத வகையில் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ்க் கட்சிகளிடம் தேர்தல்கள் ஆணைக்குழு நிபந்தனைகளை முன்வைக்கவேண்டும். கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் நாட்டின் சட்டத்துக்கு உட்பட்டு தயாரிக்கப்படவேண்டும் என்ற நிபந்தனையை முன்வைக்கவேண்டும். அதையும் மீறியதாக தேர்தல் விஞ்ஞாபனங்கள் அமைந்தால் நீதிமன்றத்தின் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும். என்றனர்

(ஒ.5,22)

## கலாபூசண விருதுக்கான விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜூலை 1

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வருடந்தோறும் வழங்கப்படுகின்ற கலாபூசண விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நாடகம், எழுத்தாளர்கள், நடனம், ஓவியம், சிற்பம், இசை, கிராமியக்கலை, திரைப்படக்கலை, தற்காப்புக்கலை மற்றும் ஏனைய கலைத்துறைகளில் சிறந்த சேவையாற்றி 60 வயதுக்கு மேற்பட்ட கலைஞர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

தெல்லிப்பழைப் பிரதேச செயலக பிரிவைச் சார்ந்த, மேற்குறிப்பிட்ட துறைகளில் சேவையாற்றிய கலைஞர்கள் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 3 ஆம் திகதிக்கு முன்னதாக கலாசாரப்பிரிவில் ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (க)

## இன்றும் நாளையும் மின் தடை

யாழ்ப்பாணம், ஜூலை 1

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்றும் நாளையும் மின் தடைப்படவுள்ளது.

அதன்படி,

இன்று புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்ப்பாணம் வடமராட்சியில் யாக்கரு, கப்பூது, கனகம் புளியடி, தில்லையம்பலம் ஆகிய இடங்களிலும் வவுனியா பகுதியில் புளியங்குளம், கிறிஸ்தவகுளம், ஜோசப் முகாம், எஸ்.எவ். எச்.க்கியூ வன்னி இராணுவ முகாம், விமானப்படை இராணுவ முகாம், விமானப்படை முகாம் றேடார் ஆகிய இடங்களிலும், மன்னார் பகுதியில் முற்பகல் 10 மணியிலிருந்து மதியம் 2 மணிவரை துருக்கி நகரம், தாராபுரம், ஆகிய இடங்களில் மின் தடைப்படும்.

நாளை வியாழக்கிழமை, காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்ப்பாணத்தில் மாவிட்டபுரம் சந்தியிலிருந்து கீரிமலை நகுலேஸ்வரம் கோவில் வீதி வரை, கொல்லங்கலட்டி, மாவை கலட்டி, கீரிமலை கடற்படை முகாம், திண்மக் கழிவகற்றும் இடம் கீரிமலை, மந்திகை உபய கதிர்காமம், வல்லிபுரம், வல்லிபுரம் தேசிய நீர்ப்பாசன சபை, டொக்யாட் முல்லை ஆகிய இடங்களிலும்,

வவுனியா பகுதியில் புளியங்குளம், கிறிஸ்தவகுளம் ஆகிய இடங்களிலும் மன்னார் பகுதியில் முற்பகல் 9 மணியிலிருந்து மாலை 4 மணிவரை துருக்கி நகரம் தாராபுரம் ஆகிய இடங்களிலும் மின் தடைப்படும் என்று மின்சார சபை அறிவித்துள்ளது. (து)

**DISTRICT SECRETARIAT, JAFFNA**
**INVITATION FOR BIDS – (IFB 2)**

Procurement for Improvement of Downstream

at Thondamanaru surrounding area of the bridge in Jaffna Division – Kilinochchi range

Please see the above mentioned Invitation for Bids (IFB 2) in Daily News dated 01.07.2020

K.Mahesan
Government Agent / District Secretary
District Secretariat,
Jaffna

(in.13119) (13.17)

## ஆதன உரிமைமாற்ற அறிவித்தல்
### வலிகாமம் வடக்கு பிரதேசசபை
### உப அலுவலகம் - மல்லாகம்

**விண்ணப்பதாரர்: - பியதாஸ மோகனதாஸ் பெண் மினிதா**
**முகவரி: - காட்டுத்தறை, மல்லாகம்.**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை மல்லாகம் உப அலுவல கத்திற்கு உட்பட்ட வட்டாரம் - 12. மல்லாகம் கிழக்கு ஏழாலை ஒழுங்கையில் அமைந்துள்ள மல்லாகம் கோயிற் பற்றும் இறையுமான "கப்பம்புலம் அல்லது கம்பன்புலம்" என்ற ஆதனம் ஆதனப் பதிவேட்டில் பதியப்பட வில்லை.

குறித்த ஆதனமானது 1930ஆம் ஆண்டு தை மாதம் 11 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் ச.சபாபதிப்பிள்ளை முகதாவில் 16886 ஆம் இலக்கத்தில் முடித்த அறுதி உறுதிப்படி ஆண்டி மகள் சின்னியும். ஆண்டி கந்தனும் கொள்விலை ஆதனமாக ஆண்டனுபவித்து வந்தார்கள் என்றும் இவர்கள் இருவரும் சந்ததியற்று காலம் செல்ல அவரின் சகோதரன் ஆண்டி தவசியை வந்தடைந்தென்றும் குறித்த ஆண்டி தவசி இறக்க அவரது ஒரே மகன் தவசி கிருஸ்ணனை வந்தடைந்ததென்றும் இவரும் இறக்க இவரது பிள்ளை களான சின்னக் குட்டி நல்லையா பெண் செல்வராணியும். தவசி கிருஸ்ணன் மகள் கனகமணி ஆகிய இருவர் மட்டும் தங்களுக்கு சேரவேண்டிய முதுசம் என 12.02.1999 ஆம் ஆண்டு பிரசித்த நொத்தா ரிஸ் கா.சி.செ. முத்துக்குமாரு முகதாவில் 4484 இலக்கத்தில் முடித்த வெளிப் படுத்தல் உறுதி மூலம் வெளிப்படுத்தியுள்ளார். பின்னர் அதே திகதி அதே நொத்தாரிஸ் முகதாவில் 4485 இலக்கத்தில் முடிந்த பிரிவிடுதல் உறுதிப்படி இருவரும் பிரிவிட்டுக் கொண்டனர்.

பின்னர் இருவரும் 20.07.2005 ஆம் ஆண்டு பிரசித்த நொத்தாரிஸ் ந.தம்பிமுத்தன் முகதாவில் 5065 இலக்க உறுதியின் மூலம் தேவராசா மதிவர்ணனுக்கும் பெண் சாமினிக்கும் விற்பனை செய்தனர். அதன் பின் 24.09.2013 ஆம் ஆண்டு பிரசித்த நொத் தாரிஸ் ந.தம்பிமுத்தன் முகதாவில் 9384 இலக்க உறுதி மூலம் கிருஸ்ணர் மகள் கனகமணி கொள்வனவு செய்தார். அதே நொத் தாரிஸ் அதே திகதியில் 9385 இலக்க உறுதி மூலம் தர்மலிங்கம் சின்னராசா என்பவருக்கு நிபந்தனை அறுதியாக வழங் கியுள்ளார். 30.03.2016 ஆம் ஆண்டு பிரசித்த நொத்தாரிஸ் ந.தம்பிமுத்தன் முகதாவில் 10735 இலக்க உறுதியின் மூலம் தர்மலிங்கம் சின்னராசா. கிருஸ்ணர் மகள் கனகமணி ஆகியவர்கள் பியதாஸ மோகனதாஸ் பெண் மினிதா ஆகியவர்களுக்கு அறுதியாக வழங்கினர்.

**ஆதன விவரம்**

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். வலிகாமம் வடக்கு பிரதேச சபை மல்லாகம் கோவிற்பற்றும் இறையுமான "கப்பம்புலம் அல்லது கம்பம்புலம்" உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் M.சண்முகநாதன் அவர்களால் 22.08.2016 ஆம் திகதிய 1817 இலக்க வரைபடத்தின்படி நிலப்பரப்பு ஒன்றும் (01). இதன் எல்லைகள்.

கிழக்கு - சுந்தரமூர்த்தி இராசநாயகத்துக்கும் பெண் சாந்திக்குமுரிய ஆதனம்
வடக்கு - சின்னக்குட்டி நல்லையாவுக்கும் பெண் செல்வராணிக்கு முரிய ஆதனம்
மேற்கு - சின்னக்குட்டி நல்லையாவுக்கும் பெண் செல்வராணிக்கு உரிய ஆதனமும் றஞ்சித்குமார் பெண் - தர்மினிக்கு உரிய ஆதனமும்
தெற்கு - அருச்சுனர் சுந்தரலிங்கத்தின் ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை பியதாஸ மோகனதாஸ் பெண் மினிதா எனும் பெயரில் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாள்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சோமசுந்தரம் சுகிர்தன்**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை,**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி).**

(cs.32719) (13.17)

## 17ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 29 . 02 . 1929

இறப்பு 09 . 07 . 2003



### பொன்னையா தங்கராசா

பூமியிலே புகலிடமாய் மலர்ந்தாய்
சிரித்தமுகத்துடன்திட்டங்கள் வகுத்து
திடமாக வாழ்வதற்கு முன்
திசைமாறிப் போனது ஐயா உன் கதை
17 ஆண்டு ஆனாலும்
மாறாது ஐயா உன் நினைவு.

**அண்ணாமலை வீதி,**
**சுதுமலை.**

**மகன் - குருபரன்**

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 10 . 1958

மறைவு 30 . 06 . 2020



### தெய்வேந்திரம் புஷ்பவதனா

உடுப்பிட்டி இமையாணனை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தெய்வேந்திரம் புஷ்பவதனா நேற்று (30.06.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி தெய்வேந்திரம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பெருமாள் ஐயாத்துரை - செல்வராணி தம்பதியரின் அன்பு மகளும், கிருஷாந். பார்த்தீபன், சோபிதா, சேல்விழி ஆகியோரின் அன்புத் தாயும், நதியாவின் அன்பு மாமியும், யாஷினியின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற சந்திரவதனா, பாலச்சந்திரன் (ஜேர்மனி), கமலவதனா, புனிதவதனா, பிறேமவதனா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் உடுப்பிட்டியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (01.07.2020) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


**தகவல்: குடும்பத்தினர்**

(m.13) (13.17) **077 313 3563, 077 065 0457**

## மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 09 . 1931

மறைவு 28 . 06 . 2020



### சின்னையா தம்பு

யாழ். அரியாலையைப் பிறப்பிடமாகவும், நெதர்லாந்து Holland ஐ வதிவிடமாகவும் கொண்ட சின்னையா தம்பு 28.06.2020 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அழுக்கோன் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், செல்லம் அவர்களின் பாசமிகு கணவரும், மோகன், ஜெகன், சுகன், சுகிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும்,காலஞ்சென்றவர்களான கதிர்வேலு, தங்கம்மா, அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான கோகிலம், தர்மலிங்கம் மற்றும் குணவதி, கோபால், ருக்குமணி, தேவராசா, கமலா, விஜயன் ஆகியோரின் அன்பு மைத்துனரும்,ஜெனித்தா, வசந்தி, துஷ்யந்தி, றெக்ஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும், வினோத், றஜிதா, சாருசன், ஹரிஷன், அகிஷன், அபிஷன், அஜிஷன், மிதுஷன், ஜெருஷன், மெருஷ்கா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.07.2020) வியாழக்கிழமை நெதர்லாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(cs.32711) (13.17) **தகவல்: குடும்பத்தினர்**

### ஜூலை...

கள் மற்றும் சுகாதார அமைச்சின் ஊழியர்கள் வாக்களிப்பதற்காகவே இவ்வாறு குறித்த தினம் விசேட தினமாக அறிவிக்கப்பட்டுள்ளதாக மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். நேற்றைய ஊடக சந்திப்பிலேயே அவர் இதைத் தெரிவித்தார். (த)

### பாடசாலை...

ணியின் பரப்புரைக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் குளமங்கால் பகுதியில் நடைபெற்றது.

கூட்டத்தில் கலந்துகொண்ட கூட்டணியின் வேட்பாளர்கள் 'பாண்ட்' இசை அணிவகுப்பு மரியாதையுடன் பரப்புரை மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

பாடசாலை மாணவர்களே அணிவகுப்பு மரியாதை நடத்தியிருந்தனர். அத்துடன் பாடசாலை ஒன்றின் 'பாண்ட்' இசைக் கருவிகளே அதற்குப் பயன்படுத்தப்பட்டிருந்தன.

இந்த விடயம் தொடர்பில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு உடனடியாகக் கவனம் செலுத்தியது. பாடசாலை அதிபரிடம் இந்தச் சம்பவம் தொடர்பில் விளக்கம் கோரியுள்ளது. (ஒ.5)

**வாடகைக்கு**
சாவகச்சேரி நகரின் மத்தியில்.
A9 வீதியில் கடை (கீழ். மேல்
வாடகைக்கு உண்டு.
**077 536 1370, 077 152 6874**

**வேலையாள்கள் தேவை**
Ice Packet, யோக்கட்,Cup Juice (பால்
உற்பத்தி சம்பந்தமான ) தொழில் தெரிந்தவர்கள்
தொடர்புகொள்ளவும். (முல்லைதீவு மாவட்டம்)
KST Distributor **077 153 1167**

**வேலையாள்கள் தேவை**
சுத்திகரிப்பு நிலையத்திற்கு
வேலைதெரிந்த பணியாளர் தேவை.
**077 907 8839**

**மாபிள் வேலை**
உங்கள் வீட்டிற்கு தரமான முறையில்
அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி 45 ரூபா
**077 3341 281**

**பெயர் மாற்றம்**
குணரத்தினம் ரகுலன் ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை குணரத்தினம் இராகுலன் என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களில் இராகுலன் என்றே கையொப்பமிடுவேன் என இலங்கை சோசலிச குடியரசிற்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.
(cs.32663) (13.17) கு. இராகுலன்

**சுன்னாகத்தில் அமைந்துள்ள பிரபல வியாபார முகவர் நிலையத்திற்கு கீழ்க் குறிப்பிட்டவர்கள் தேவைப்படுகின்றனர்**
- முகாமையாளர் (மொத்த பல்பொருள்வாணிபத்தில் அனுபவம் பெற்றவர்கள் விரும்பத்தக்கது)
- சாரதி
- விற்பனை பிரதிநிதி (Salesref)
- விற்பனை உதவியாளர் (Salesman)
- மருந்தாளர் (Pharmacist)

தொடர்பு: **076 058 8889**
(cs.32673) (13.17)

**பணியாளர் தேவை**
திருநெல்வேலியில் இயங்கும்
பிரபல பல்பொருள் வாணிபம்
அத்துடன் இணைந்த பொதியிடல்
நிறுவனத்துக்கு
பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்
1. சிட்டை எழுதுனர்
2. விற்பனையாளர்
3. பொதிகட்டுனர்
4. வகுப்புக் கூலியாள்
5. பண சேகரிப்பாளர்
6. மேற்பார்வையாளர்
ஆண்/ பெண் இருபாலாரும்
உடன் தேவை.
தொடர்புகொள்ளவேண்டிய இல.
**077 183 6462**
(cs.31781) (13.17)

### மீண்டும்...

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் 7பேரும், முல்லைத்தீவில் நேற்று ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களோடு இன்னும் 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரியவருகிறது. தேர்தல் காலத்தில் நடைபெறும் இந்தக் கைதுகள் மக்கள் மத்தியில் பேரச்சத்தை ஏற்படுத்தியுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் அக்கராயன், ஜெயபுரம், வன்னேரிப் பகுதிகளைச் சேர்ந்த 7 பேர் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். முல்லைத்தீவு கேப்பாபிலவைச் சேர்ந்த இளைஞனும் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

"எமக்கு 13 முறைப்பாடுகள் இதுவரை கிடைக்கப் பெற்றுள்ளன. கிளிநொச்சியிலிருந்து 12 முறைப்பாடுகளும் யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு முறைப்பாடும் கிடைத்துள்ளன. கைதுசெய்யப்பட்டவர்களில் சிலர் கிளிநொச்சியிலுள்ள பயங்கரவாத தடுப்புப் பிரிவு அலுவலகத்தில் வைத்து விசாரிக்கப்படுகின்றனர். அவர்களை நாம் நேரில் பார்வையிட்டோம்.

சிலர் கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றார்கள்" என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார். பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் முன்னெடுக்கப்படும் இந்தத் திடீர் கைதுகள் தொடர்பில் பொதுமக்கள் பேரச்சம் அடைந்துள்ளனர். (கு-ஒ.5)

### வெடிப்புச்....

சந்தேகத்திலேயே கைதுகள் இடம்பெற்றுள்ளன. எத்தனை பேர் கைது செய்யப்பட்டார்கள் என்ற விவரத்தை இப்போது கூற முடியாது. இவ்வாறு பொலிஸ் பேச்சாளர் ஜாலிய சேனாரட்ண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவர்கள் வழங்கும் தகவல்களுக்கு அமைவாக மேலும் சிலர் கைது செய்யப்படுகின்றனர். இவர்களில் பலர் பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழேயே கைதுசெய்யப்பட்டுள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகளை மீள் உருவாக்கம் செய்ய முற்பட்டனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டார்களா என்பதை விசாரணைகளின் பின்னரே கூற முடியும். பயங்கரவாதத் தடுப் புப் பிரிவினரும், பொலிஸாரும் இணைந்து இந்த விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர், என்றார். (ஒ.ப,22)

### வாக்குகள் எண்ணல்...

தேர்தல் முடிவுகளை மதியம் 2 மணியிலிருந்து வெளியிடமுடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தநிலையில், ஊடக நிறுவனங்களின் தலைமை அதிகாரிகள் மற்றும் செய்திப் பிரிவு பிரதானிகளுடன் தேர்தல்கள் செயலகத்தில் நேற்றுப்பிற்பகல் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் இவற்றைத் தெரிவித்தார்.

### விசாரணையிலிருந்து...

விலகுகின்றேன்" என்று உயர் நீதிமன்ற நீதியரசர் பிரியந்த ஜெயவர்த்தன அறிவித்தார். அதனால் மனு மீதான விசாரணைக்கென மூவரங்கிய அமர்வை நியமிப்பதற்காக வழக்கு ஜூலை 16ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

சட்டத்துறையில் பணியாற்றும் சட்டத்தரணிகள் நீதிமன்றங்களில் முன்னிலையாவதைத் தடைவிதித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவுறுத்தல் வழங்கியமைக்கும் தான் நீதி மன்றங்களில் முன்னிலையாவதைத் தடுக்கும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவை எடுத்த தீர்மானத்துக்கு எதிராகவும் கலாநிதி குமாரவடிவேல் குருபரன் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்கள், சட்டமா அதிபர் என 41 எதிர்மனுதாரர்கள் மனுவில் இணைக்கப்பட்டுள்ளனர். கலாநிதி குமாரவடிவேல் குருபரன் சார்பில் சட்டத்தரணி மோகன் பாலேந்திரா இந்த மனுவை கடந்த டிசெம்பர் 17ஆம் திகதி உயர் நீதிமன்றில் சமர்ப்பித்தார்.

மனுவை ஏற்றுக்கொண்டு விசாரணை நடத்துவது பற்றியும் இடைக்காலக் கட்டளை பற்றியும் முன்னுரிமை விடயங்கள் பற்றிய ஆட்சேபனைகளை முன்வைப்பதற்கு மனு நேற்றுவரை ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், நேற்று உயர் நீதிமன்ற நீதியரசர்கள் பிரியந்த ஜெயவர்த்தன, பத்மன் சூரசேன, யசந்த கொதகொட ஆகிய மூவர் கொண்ட அமர்வு முன் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கனக ஈஸ்வரன் முன்னிலையாகினார். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் அதன் உறுப்பினர்கள் சார்பில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் சார்பில் குடியுரிமை வழக்கில் தோன்றியவரான ஜனாதிபதி சட்டத்தரணி ருமேஸ் டி சில்வாவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவை சார்பில் மூத்த சட்டத்தரணி இ. தம்மையா மற்றும் சட்ட மா அதிபர் சார்பில் மூத்த மேலதிக மன்றாடியார் நாயகம் இந்திகா டெமுனி டி சில்வாவின் மூத்த அரச சட்டவாதி கலாநிதி அவந்தி பெரேரா முன்னிலையாகினர். குருபரனும் மன்றில் பிரசன்னமாகியிருந்தார். இருதரப்பினரும் வாதங்களை முன்வைத்தனர்.

இடையே குறுக்கிட்ட உயர் நீதிமன்ற நீதியரசர் பிரியந்த ஜெயவர்த்தன, "சட்டத்துறை சார்ந்த ஆசிரியர்கள் நீதிமன்றங்களில் முன்னிலையாகும் அவசியத்தை முன்னைய சந்தர்ப்பங்களில் வலியுறுத்தியதன் காரணமாக தான் இந்த மனுவை கேட்பது தொடர்பில் எதிர் மனுதாரர்களுக்கு ஆட்சேபனை உண்டா?" என்று கேள்வி எழுப்பினார்.

"எமக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. ஆனால் அமர்விலிருந்து விலகுவதா இல்லையா என்பதை நீதியரசரே முடிவெடுக்க வேண்டும்" என்று ஜனாதிபதி சட்டத்தரணி ருமேஸ் டி சில்வா சுட்டிக்காட்டினார். அதனையடுத்து தான் இந்த மனு மீதான விசாரணையிலிருந்து விலகுகின்றேன் என்றும் வேறு ஒரு நீதியரசரை பதிலீடு செய்து மனுவை விசாரிப்பதற்கு எதிர்வரும் ஜூலை 16ஆம் திகதி நியமிக்கப்படுகின்றது என்று இந்த அமர்வின் தலைமை நீதியரசர் பிரியந்த ஜெயவர்த்தன கட்டளையாக்கினார்.

முன்னதாக நீதியரசர் எஸ்.துரைராஜா, மனுதாரர் கலாநிதி குமாரவடிவேல் குருபரனை தனிப்பட்ட முறையில் தெரியும் என்று வெளிப்படுத்தி இந்த மனு மீதான விசாரணையில் பங்கேற்கமாட்டன் என்று மறுத்திருந்தார். அதேவேளை, நீதியரசர் யசந்த கொதாகொட, சட்ட ஆசிரியர்கள் சட்டத்தொழிலில் ஈடுபடும் பொழுது பெறுகின்ற நடைமுறைசார் அறிவு சட்ட மாணவர்களுக்கு போய்ச் சேர வாய்ப்புள்ளது அல்லவா என்றும் கருத்துரைத்தார்.

மனுதாரர் இந்த மனுவை நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துவதற்காக தாக்கல் செய்துள்ளார் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி ருமேஸ் டி சில்வா தனது ஆட்சேபனையின் முன்வைத்தார்.

அதனை வன்மையாக மறுத்த ஜனாதிபதி சட்டத்தரணி கனக ஈஸ்வரன், தாம் இந்த மனுவை அரசியல் மயப்படுத்த முயற்சிக்கவில்லை என்றும் அவ்வாறு அரசியலாக்க முயற்சிப்பதைக் கண்டிப்பதாகவும் இந்த விடயத்தை புலமைத்துவ சுதந்திரத்தை முன்னிறுத்திய சட்ட விடயமாகவே நடத்த எத்தனிப்பதாகவும் சுட்டிக்காட்டினார். இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பின்னர் காணாமல் ஆக்கப்பட்ட எழுத்தாணை மனுக்கள், ஆள்கொணர்வு மனுக்களில் சட்டத்தரணி கு.குருபரன் முன்னிலையாகி வந்தார். இந்த நிலையிலேயே அவர் நீதிமன்றங்களில் வாதிட தடைவிதிக்கப்பட்டது. (த)

### கொரோனா..

தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 711 ஆக அதிகரித்துள்ளது. கொரோனாத் தொற்று காரணமாக 325 பேர் தொடர்ந்தும் மருத்துவமனைகளில் தங்கி சிகிச்சைபெற்று வருகின்றனர்.

கொரோனாத் தொற்றுச் சந்தேகத்தில் 49 பேர் மருத்துவக் கண்காணிப்பில் உள்ளனர். கொரோனாவால் இதுவரை நாட்டில் 11 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

### மோசடிகளை....

காணி (இலத்திரனியல் முறைமை) பதிவை துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பணித்தார்.

ஈ - காணி (இலத்திரனியல் முறைமை) பதிவு செய்தல் நடவடிக்கை தொடர்பாக ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காணிப் பதிவின்போது இடம்பெறும் மோசடிகள் மற்றும் தாமதங்கள் காரணமாக பொதுமக்கள் பல அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். காணி ஆணையாளர் திணைக்களம், காணி உரித்துகள் நிர்ணய நிறுவனம், நில அளவைத் திணைக்களம் மற்றும் பதிவாளர் நாயகத் திணைக்களம் ஒன்றிணைந்த வகையில் ஈ - காணி) பதிவு செய்யும் நடவடிக்கையை துரிதப்படுத்துவதன் முக்கியத்துவத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

காணிப் பதிவுசார் நிறுவனங்களை ஒன்றிணைப்பதன் அவசியத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். வனஜீவராசிகள், வன பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் அமைச்சையும் ஒன்றிணைத்து குழுவொன்றை நியமித்து வேலைத்திட்டத்தை துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

ஈ - காணி (இலத்திரனியல் முறைமை) பதிவின் ஊடாக உறுதிப்பத்திரம், காணி பொழிப்பு அறிக்கை கணினிமயப்படுத்தப்படும். பொழிப்பு அறிக்கை பெற்றுக்கொள்ளும்போது கணினிமயப்படுத்தப்பட்ட ஆவணத்தை வழங்குவதற்கும் சட்டத்தரணிகளுக்கு, பத்திரத்துறை பதிவாளர்களுக்கு மற்றும் எந்தவொரு நபருக்கு அல்லது அரச நிறுவனத்திற்கு ஒன்லைன் மூலம் காணி பற்றிய தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும். இதன் மூலம் காணி மோசடிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியுமென அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இலங்கை தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிலையத்துடன் (ICTA) ஒன்றிணைந்து ஓகஸ்ட் மாதமளவில் இந்த வேலைத்திட்டத்தை மக்கள் மயப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

ஈ - காணியின் கீழ் பதிவு செய்யும் காணிகளுக்கு இலத்திரனியல் கணக்குப் புத்தகம் ஒன்றையும் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்த செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

### மாகாண சபை...

மைப்பு உருவாக்கப்படவேண்டும். புதிய அரசமைப்பை உருவாக்கும் பணியை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தனது கையில் எடுக்கவேண்டும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர கோரியுள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத் திட்டம் சம்பந்தமாக தமிழ் அரசியல்வாதிகளால் விடுக்கப்பட்டுவரும் அறிவிப்புகள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரபாகரனை பயன்படுத்தி தனி ஈழத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அன்று நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்தத் திட்டம் கைகூடாத நிலையிலேயே புதிய அரசமைப்பின் ஊடாக அந்த இலக்கை அடைவதற்கு தமிழ்க் கூட்டமைப்பு பாடுபட்டுவருகின்றது. இதன் ஓர் அங்கமாகவே பிரதமர் மஹிந்த ராஜபக்சவுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வதற்கு அந்தக்கட்சி முயற்சிக்கின்றது.

எனவே, கூட்டமைப்பின் அணுகுமுறைகள் தொடர்பில் அரசு விழிப்பாகவே இருக்க வேண்டும்.

அதிகாரப்பகிர்வு அவசியமில்லை. மாகாண சபைகள் முறைமை நீக்கப்பட வேண்டும் என கருத்துகள் முன்வைக்கப்பட்டுவருகின்றன. அதனை நானும் வரவேற்கின்றேன். புதிய அரசமைப்பின் ஊடாக இந்தவிடயம் செய்யப்படவேண்டும். ஒற்றையாட்சியைப் பலப்படுத்தவேண்டும்.

அதேபோல் புதிய அரசமைப்பை உருவாக்கும் பொறுப்பை நாடாளுமன்றத்திடம் மாத்திரம் ஒப்படைக்காமல் புத்திஜீவிகளிடமும் அதற்கான வேலைத்திட்டத்தை ஜனாதிபதி வழங்கவேண்டும். ஜனாதிபதியின் நேரடி கண்காணிப்பின் கீழ்தான் பணிகள் இடம்பெறவேண்டும். கடந்த ஆட்சியின்போது நாட்டை பிளவுபடுத்தும் வகையிலேயே அரசமைப்பு உருவாக்கப்பட்டிருந்தது - என்றார். (ஒ.5,44)

### அலைபேசிகளை

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்ப்பாண மாநகரில் வீதியால் செல்லும் இளைஞர்களை மிரட்டி அலைபேசிகளைக் கொள்ளையடித்த சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட மூவரைக் கொண்ட கும்பலை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம் நாவலர் வீதி, கைலாசபிள்ளையார் கோவிலடி, கந்தர்மடம் சந்தி மற்றும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிக்கு அருகாமை ஆகிய இடங்களில் வீதியால் பயணித்த இளைஞர்களை வழிமறித்த மூவர், அவர்களிடம் அலைபேசிகளைப் பறித்துள்ளனர். வீதியால் பயணிக்கும் இளைஞர்களை வழிமறிக்கும் அந்தக் கும்பல், அலைபேசியைக் காட்டு என்று மிரட்டுவார்கள். அவர்களில் ஒருவர் எனது தங்கையை ஏன் படம் எடுத்தாய் ? என்று மிரட்டி அலைபேசியில் உள்ள படங்களை பார்ப்பது போன்று பாசாங்கு காட்டிவிட்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் செல்வர்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் மாநகரில் அண்மைக்காலமாக அதிகரித்திருந்த நிலையில் முறைப்பாட்டாளர்களின் தகவலின் அடிப்படையில் அவர்களில் 3 பேரின் அலைபேசிகள் ஒருவரிடமிருந்து கைப்பற்றப்பட்டன. அவருக்கு குறித்த வழிப்பறிக் கும்பலே விற்பனை செய்துள்ளது.

அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அரியாலையைச் சேர்ந்த இருவரும் இராசாவின்தோட்டம் வீதியைச் சேர்ந்த ஒருவரும் என்று மூவரை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய பெருங்குற்றத் தடுப்புப் பொலிஸார் கைது செய்தனர். சந்தேக நபர்கள் மூவரும் 25 வயதுக்குட்பட்டவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர்கள் யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் முற்படுத்தப்படுத்தப்பட்டனர். அவர்களில் அலைபேசிகளை வாங்கி வைத்திருந்தவருக்கு மன்றால் பிணை வழங்கப்பட்டது. ஏனைய மூவரை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்த பொலிஸார் மன்றில் விண்ணப்பம் செய்தனர்.


எனினும், அடையாள அணிவகுப்பின்றி தம் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்வதாக சந்தேக நபர்கள் மூவரும் மன்றுரைத்தனர். அதனால் சந்தேக நபர்கள் மூவருக்கும் எதிராக குற்றப்பத்திரத்தை மன்றில் சமர்ப்பிக்க பொலிஸாருக்கும் அறிவுறுத்தல் வழங்கிய யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல், அதுவரை சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ஒ.5)


# கறுப்பினத்தவர்களுக்கு ஆதரவாக களமிறங்குகின்றது மே.இ.தீவுகள்!

**ட்ரினிடாட், ஜூலை 1**

**இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணியினர் நிறவெறிக்கு எதிரான வாசகம் பொறிக்கப்பட்ட ஜேர்சியை அணிந்து விளையாடவுள்ளனர்.**







அமெரிக்காவில் கறுப்பினத்தவரான ஜோர்ஜ் புளொய்ட் என்பவர் அமெரிக்கப் பொலிஸாரால் கழுத்து நெரித்துக்கொல்லப்பட்டமையை அடுத்து, கறுப்பினத்தவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நிறவெறிக் கருத்துக்கள் மற்றும் அடக்குமுறைகளைக் கண்டித்து அமெரிக்காவில் தொடர்ந்து போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

அமெரிக்காவில் மட்டுமல்லாமல் அமெரிக்காவுக்கு வெளியிலும் இவ்வாறான போராட்டங்கள் தொடர்ந்துவரும் நிலையில் மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் மற்றும் இன்னாள் வீரர்கள் பலரும் நிறவெறிக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் தலைவர் சமி, 'நிறவெறிக்கு எதிராகக் கருத்துத் தெரிவிப்பவர்கள் அதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். நான் களத்தில் பலமுறை நிறவெறிச் சீண்டல்களைச் சந்தித்துள்ளேன்' என்று தெரிவித்திருந்தார்.

தற்போதைய அணித்தலைவர் ஹோல்டர் ஒருபடி மேலேசென்று, 'கிரிக்கெட்டில் நிறவெறிக் கருத்துக்களை முன்வைப்பவர்களுக்கு எதிராக ஆட்டநிர்ணயம் மற்றும் ஊழல் என்பவற்றுக்கு நிகரான தண்டனை மேற்கொள்ளப்பட வேண்டும்' என்று வலியுறுத்தியிருந்தார். இந்த நிலையில் எதிர்வரும் 8ஆம் திகதி ஆரம்பமாகும் மேற்கிந்தியத் தீவுகள் இங்கிலாந்து இடையிலான தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணியினர் நிறவெறிக்கு எதிராக் குரல்கொடுக்கும் விதமாக 'பிளைக் லிவ்ஸ் மெட்டர்' (BLACK LIVES MATTER)என்ற வாசகம் பொறிக்கப்பட்ட ஜேர்சியை அணிந்து விளையாடவுள்ளனர். (ம)

## ரிஷப் பன்ட் சிறந்த வீரர்

இந்திய அணியின் இலக்குக் காப்பாளர் பன்ட் சிறந்த வீரர். அவருக்கு அணி நிர்வாகத்தின் ஆதரவு கூடுதலான அளவுக்கு உள்ளது - என்று தெரிவித்துள்ளார் இந்திய அணியின் துடுப்பாட்டப் பயிற்சியாளர் விக்ரம் ரதோர். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: ரிஷப் பன்டுக்கு கடந்த வருடம் சிறப்பாக அமையவில்லை. சர்வதேச போட்டியிலும் சிறப்பாக விளையாடவில்லை. அணி நிர்வாகம் இன்னும் அவருக்கு ஆதரவாக இருக்கிறது. அவர் சிறப்பான வீரர் என்பதை நாங்கள் நம்புகிறோம். அவர் ஓட்டங்களைக் குவிக்கத் தொடங்கிவிட்டால் இந்திய அணிக்கு மிகப்பெரிய அளவில் உதவியாக இருப்பார். இன்னும் எம்.எஸ்.டோனி இந்திய அணிக்காக விளையாடும் நோக்கில்தான் உள்ளார். அவரது எதிர்காலம் குறித்து என்ன நடக்கும் என்பது எங்களுக்குத் தெரியாது. அவரது இடத்தை நிரப்புவது எளிதான காரியம் அல்ல. ரிஷப் பன்ட் சில ஆட்டங்களில் தடுமாறியதால் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளார். ஆனால், இது போன்ற சில விஷயங்கள் வலிமையாகவும், சிறந்த வீரராகவும் உருவாக்கும்" - என்றார். (ம)

மாஸ்க் விற்பனைக்கு
பாடசாலை மாணவர்களுக்கு முகக் கக்கவசம் (Mask) 3Ply Face Mask With 3 Layers
விலை 60/=
(பாடசாலைகளுக்கு விஷேட விலைக்கழிவு வழங்கப்படும்)
076 668 7513

விக்னா
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 076 482 4490
O/L DAY CLASS
8.00 to 2.00
ஆரம்பம் 03-07-2020
8.00 மணி
• யாழ் நகரில் O/L வகுப்புகளுக்கு தனித்துவமான ஒரே நிறுவனம்
• கடமை, கண்ணியம், கட்டுப்பாடுடன் திகழும் நிறுவனம்.
• பிரிவு 1 இற்கு 60 மாணவர்களே அனுமதிக்கப்படுவர்.
• அலகு ரீதியான மீட்டலுடன் மாதாந்தப் பரீட்சையும் நடைபெறும்.
அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்

வேலைவாய்ப்பு
யாழ்ப்பாணம் வேம்படிச் சந்திக்கு அருகாமையில் அமைந்திருக்கும் எமது
Kings Electronics (Pvt) Ltd நிறுவனத்திற்கு
Salesman - விற்பனையாளர்
Cashier - காசாளர்
Accountant assistant - கணக்கு உதவியாளர்
பணியாளர்கள் தேவை. சுயவிவரக்கோவையுடன் நேரில் சமுகமளிக்கவும்.
தொடர்புகளுக்கு:
KINGS ELECTRONICS (Pvt) Ltd
076 359 4665
076 359 4673
No.12, Pointpedro Road, Jaffna
வேம்படி சந்திக்கு அருகாமையில்

## 300 ஓட்டங்களை எடுத்தால் இங்கிலாந்தை வீழ்த்துவோம்

### அஷார் அலி நம்பிக்கை

300 ஓட்டங்களை முதல் இன்னிங்ஸில் எடுத்தால் இங்கிலாந்தை வீழ்த்த முடியும் இவ்வாறு தெரிவித்துள்ளார் பாகிஸ்தான் அணியின் தலைவர் அஷார் அலி.

மேற்கிந்தியத் தீவுகள் இங்கிலாந்து இடையிலான தொடர் முடிந்த பின்னர், இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் நடை பெறவுள்ளது. இந்தத் தொடர் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் அஷார் அலி.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மீண்டும் கிரிக்கெட் தொடங்கவுள்ளமை உற்சாகம் அளிக்கிறது. வீரர்களும் களம் காண ஆர்வமுடன் காத்திருக் கிறார்கள். அடிக்கடி மருத்துவ பரிசோதனை என்பது இப்போது விளையாட்டில் ஓர் அங்கமாகி விட்டது. இந்த கடினமான கால கட்டத்தில் கிரிக்கெட் மூலம் மக்களை மகிழ்விக்க முயற்சிப்போம்.

இங்கிலாந்து தொடர் எப்போதும் சவால் மிக்கது. 2016 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் இங்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடியபோது தொடர்களைச் சமநிலையில் முடித்தோம். முந்தைய உள்நாட்டு டெஸ்ட்களில் எங்களது வீரர்களில் நிறைய பேர் சதம் அடித்தனர். அதே நம்பிக்கையுடன் இங்கிலாந்துக்குப் பயணிக் கிறோம். முதல் இன்னிங்ஸில் 300 ஓட்டங்களைக் குவித்தால் இங்கிலாந்தை வீழ்த்தமுடியும் என்று நம்புகின்றேன்.

அலிஸ்டர் குக் ஓய்வுபெற்ற பிறகு இங்கிலாந்தின் ஆரம்ப இணை பலவீனமாகக் காணப்படுகிறது. இதை சாதகமாக பயன்படுத்திக் கொள்ள முயற்சிப்போம். எங்களது வேகப் பந்து வீச்சில் நல்ல முன்னேற்றம் கண்டிருக்கிறோம். வேகப்பந்து வீச்சாளர் ஷாகீன் ஷா அப்ரிடி பந்துவீசும் விதம் எந்த அணிக்கும் நெருக்கடியை கொடுக்கும். இதேபோல் நசீம் ஷா அதிக வேகத்துடன் வீசக்கூடியவர். முகமது அப்பாஸ் அனுபவம் வாய்ந்தவர். அத்துடன் திறமையான இளம் வீரர்களும் இருக்கிறார்கள். இவர்களால் இங்கிலாந்தின் துடுப்பாட்ட வரிசையை சீர்குலைக்க முடியும்.

பந்தை தேய்ப்பதற்கு எச்சிலை பயன்படுத்த தடை விதிக்கப்பட்டு இருப்பதை பின்னடைவாக பார்க்கவில்லை. 'டியூக்' வகை பந்தில் நிறைய மெழுகு பூசப்பட்டு இருக்கும். அதனால் நீண்டநேரம் பந்தின் பளபளப்புதன்மை மாறாது. அது மட்டுமின்றி வியர்வையால் பந்தை பளபளப்பாக்க முடியும். இங்கிலாந்தும் வலுவான பந்து வீச்சை கொண்டுள்ளது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஜாப்ரா ஆர்ச்சரை நீங்கலாக பார்த்தால் ஜேம்ஸ் ஆண்டர்சன், ஸ்டூவர்ட் புரோட், கிறிஸ் வோக்ஸ், பென் ஸ்டோக்ஸ் உள்ளிட்டோரின் பந்து வீச்சை நாங்கள் ஏற்கனவே சந்தித்து வெற்றியும் பெற்றிருக்கிறோம் - என்றார். (ம)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.